21

குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

நல்ல பென்ஸில்களால்

எழுதுவதற்கு
எவ்வளவு
ஆனந்தமாயிருக்கிறது

COPYING "MERCURY" ✕ 1401 HARD

மெர்குரி பென்ஸில்கள்

நல்லவை என்று
எல்லா சோதனைகளிலும்
ருசுவாகியுள்ளது

COLOURED ✱ RED & BLUE

MERCURY

The name for good Pencils

கருப்பு, இதர கலர் மற்றும் காபிங்
கிடைக்கும்

தயாரிப்பாளர்

மதராஸ் பென்ஸில் பாக்டரி

MERCURY ✕ SPECIAL HB

3, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, மதராஸ். 1.

ARUNA

பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,
Post Box No. 221,
COIMBATORE.

Phone: 409, 1409 Gram: 'TEXTOLCO'



VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

Branch :

L. I. C. BUILDING
Mount Road, : MADRAS-2

For Quality RAYON

&

TRAYOPHANE

(Transparent Cellulose Film)

★

THE TRAVANCORE RAYONS LIMITED

(India's Pioneer Manufacture of Rayon &
Cellulose film.)

Factory:

Rayonpuram P.O.
Kerala State.

Sales Office:

2/6 Second Line Beach
Madras - 1.

Managing Agents:

Emcete & Sons (Travancore) Private Limited

Statement about ownership and other particulars about Newspaper

KUMARI MALAR

FORM IV

1. Place of Publication ... Madras.

2. Periodicity of its publication ... Monthly.

3. Printer's, Publisher & Editor ... A. K. Chettiar.

   Nationality ... Indian.

   Address ... 100, Mowbrays Road, Madras-18.

6. Names and addresses of individuals who owns the newspaper ... A. K Chettiar, Sole proprietor, 100, Mowbrays Road, Madras-18.

I, A. K. Chettiar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 30—3—60.

A. K. CHETTIAR,
Signature of the publisher.

மலர் 16 இதழ் 12

விகாரி—பங்குனி

உள்ளுறை

		பக்கம்
1.	கேள்வியும் பதிலும் —காந்தியடிகள்	1
2.	இ. எம். போர்ஸ்டர் —ஈசுவரமூர்த்தி	11
3.	அணுகுண்டு சாதித்தவை —சி. இ. எம். ஜோட்	17
4.	வேலை தேடித்தரும் சீரிய பணி	21
5.	கௌசாம்பி	25
6.	சமூக இயல் கழகம்	30
7.	பயிர் இன்ஷ்யூரன்ஸ்	34
8.	கொய்த மலர்கள்	42
9.	நீர், நிலவளப் பாதுகாப்பு	52
10.	அதிசயச் சலவை இயந்திரம்	54
11.	பரிசுப் பத்திரங்கள்	56
12.	பெண்கள் தோட்டக்கலைப் பள்ளி	60
13.	மதுர கவி	63
14.	விண்வெளிப் பயணம்	66
15.	செய்திக் களஞ்சியம்	73
16.	இந்தியாவின் முன்னேற்றம் —ஜே. ஆர். விக்கின்ஸ்	80

கேள்வியும் பதிலும்

காந்தியடிகள்

கேள்வி: தாங்கள் 1947-ஆம் ஆண்டு ஜூலை பதினைந் தாம் தேதி 'ஹரிஜனி'ல் 'உண்மையான அபாயம்' என்னும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள கட்டுரையில், காங்கிரஸ் காரர்களில் அநேகர் தாங்கள் எந்த விதமான சுதந்திரம் விரும்புகிறார்கள் என்பதைக் கூட அறியாமல் இருப்பதாகக் கூறினீர்கள். தாங்கள் அன்பு கூர்ந்து, தாங்கள் அமைக்கவிரும்பும் சுதந்திர இந்தியா எவ்விதமாக இருக்கும் என்பதைத் தெளி வாகக் கூற வேண்டுகிறேன்.

பதில்: சுதந்திர இந்தியா எந்தவிதமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன் என்பதை அடிக்கடி எழுதியிருக்கிறேன். ஆயினும் இந்த நண் பர் பல கேள்விகளுடன் இதையும் கேட்டிருப்பதால் கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு ஆளாக நேர்ந்தபோதிலும் பதில் உரைப்பதே நல்லது என்று எண்ணுகிறேன்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் என்றால், இந்தியா முழுவதற்கும் சுதந்திரமாகும். இந்தியா என்பதில் சுதேச சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் அரசாங்கத்தா ருடைய தயவில் ஆட்சி நடத்திவரும், பிரெஞ்சு போர்த்துகீசிய அரசாங்கமும் அடங்கும். சுதந்திரம் என்பது மக்களுடைய சுதந்திரம் என்று பொருள் படுமேயன்றி, ஆள்வோருடைய சுதந்திரம் என்று

பொருள்படாது. ஆள்வோர் தங்கள் காலில் கிடந்து கசங்கும் மக்களுடைய விருப்பத்தை அனுசரித்தே நடக்க வேண்டும்; அவர்களுடைய விருப்பப்படி நடக்கத் தயாராயுள்ள பொதுஜன ஊழியர்களாக இருக்க வேண்டும்.

சுதந்திரம் என்பது கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். கிராமங்கள் ஒவ்வொன்றும் சகல அதிகாரங்களுடைய பஞ்சாயத்தாகிய குடியரசாக இருக்க வேண்டும். ஆதலால் ஒவ்வொரு கிராமமும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது உள்பட சகல விஷயங்களையும் தானே நிர்வகித்துக்கொள்ள வேண்டும்; தனக்கு வேண்டிய அனைத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். யார் எதிர்த்து வந்தாலும், அவர்களை எதிர்த்து நிற்பதற்குத் தக்க பயிற்சி அளிக்கப் பெறல் வேண்டும். இதைக் கொண்டு அக்கம்பக்கத்தாருடைய உதவியே வேண்டியதில்லை என்று எண்ணவேண்டாம். கிராமங்கள் ஒன்றுக்கொன்று உதவி செய்யக் கூடியனவாகவே இருத்தல் வேண்டும். ஆனால் அப்படி இருக்கும்படியாக யாரும் கட்டாயப் படுத்தமாட்டார்கள். அவர்களாகவே அவ்விதம் நடந்துகொள்ள வேண்டும். அத்தகைய ஒவ்வொருவரும் தமக்கு வேண்டுவது யாது என்பதை அறிவர். அத்துடன் யாரும் பிறர்க்குக் கிடைக்கக்கூடாததை விரும்பமாட்டார்கள்.

இத்தகைய சமூகத்துக்கு அடிப்படை, உண்மையும்அஹிம்சையுமே யாகும். பிறரால் சிருஷ்டிக்கப் பெறாமல் தானே உளதாயும், சர்வமும் அறிந்ததாயுமுள்ள ஜீவசக்தி ஒன்று, மனிதன் அறிந்த எல்லா

சக்திகளிலும் வியாபகமாயிருக்கின்றது. இந்தச் சக்திகள் எல்லாம் அழிந்து போனலும், அது அழியாமல் நிற்கும். அதுவே கடவுள். அத்தகைய கடவுளை மனப்பூர்வமாக நம்புகிறவரே உண்மையாகவும், அஹிம்சையாகவும் நடக்க முடியும். இந்த விதமாகச் சகல பொருள்களையும் தழுவி நிற்கும் ஜீவ ஒளியிடம் நம்பிக்கை இல்லையானல், நான் செய்யும் காரியங்களுக்கு எவ்வித நியாயமும் கூறமுடியாது.

எண்ணிறந்த கிராமங்களை இந்த விதமாக அமைக்கும் அமைப்பில், மேல் கீழ் என்பதே கிடையாது. அது மேலே மேலே உயர்ந்து போகும் கோபுரம் போன்றதன்று; வட்டம் வட்டமாக அலையிடும் பெரிய சமுத்திரம் போன்றதாகும். தனி மனிதர்கள் கிராமத்துக்காகத் தியாகம் செய்வார்கள்; கிராமம் கிராமத் தொகுதிக்காகத் தியாகம் செய்யும், இந்த விதமாக எல்லோரும் பிறருக்குத் தீங்கு செய்யாமலும், ஆணவம் கொள்ளாமலும், பணிவுடனும் ஒன்று சேர்ந்து ஏகமாக வாழ்வார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் சேர்ந்துள்ள கிராமத்தின் மகிமையை அனுபவிப்பார்கள்.

ஆதலால், வட்டத்தின் புறப்பாகங்கள் உட்பாகத்தை நசுக்கா; அதற்கு பலமே உண்டாக்கும். தனக்கும் உட்பாகத்தினின்றே பலத்தைப் பெற்றுக் கொள்ளும். இதெல்லாம் வெறும் கனவு என்றும், அதனல் சிறிதும் சிந்திக்கத் தக்கதல்ல வென்றும் கேலி செய்யக்கூடும். க்ஷேத்திர கணிதத்தில் புள்ளி என்று கூறப்படுவதை யாராலும் எழுதிக்காட்ட முடியாது. ஆனலும் அதன் உண்மையை யாரும் மறுக்க மாட்டார்கள். அதுபோல என்னுடைய கனவும் மனித குலத்துக்கு உபயோகமானதே யாகும்.

இந்தியா, இந்த உண்மையான லட்சியத்தைப் பரிபூரணமாக அடைய முடியாவிட்டாலும், இதற்காக வாழ வேண்டும் என்றே எண்ணுகிறேன். நம்முடைய லட்சியத்தைச் சரியாக அறிந்து கொண்டால்தான் நாம் அதை அணுக முடியும். இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக என்றேனும் அமையவேண்டுமானால், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசத்துக்கு இடமில்லாத என்னுடைய லட்சியத்தை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

நான் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவில், எல்லா மதங்களும் சரிசமமான அந்தஸ்து உடையதாயிருக்கும். நாம் எல்லோரும் ஆணிவேர் ஆழ்ந்துபோயிருக்கும் பிரமாண்டமானதோர் மரத்தின் இலைகளேயாவோம். எவ்வளவு பெரிய புயல் காற்றும் அதை அசைக்க முடியாது

என்னுடைய சுதந்திர இந்தியாவில் மனிதனை வேலை செய்யாமல் செய்வதும், அதிகாரங்களைச் சிலரிடமே இருக்கும்படிச் செய்வதுமான இயந்திரங்களுக்கு இடங் கிடையாது. மனிதப் பண்பு வாய்ந்த சமூகத்தில் தொழிலாளர்கள் சிறப்பான இடம் பெற்றவர்களாயிருப்பார்கள். சகலருக்கும் உபயோகமான இயந்திரங்கள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு.

இ. எம். போர்ஸ்டர்

ஈசுவரமூர்த்தி

இ. எம். போர்ஸ்டர் இங்கிலாந்தின் தலைசிறந்த நாவலாசிரியர். அவருக்கு இப்போது வயது எண்பதுக்குமேல். அவர் பலவிதத்தில் சில ஆண்டுகளுக்குமுன் காலமான ஜார்ஜ் பெர்னுட் ஷாவைப்போல ஆங்கில மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குபவர். ஆனல் போர்ஸ்டரின் தனித்தன்மை அருடைய முற்போக்கு எண்ணங்கள் நிறைந்த மனிதாயஉணர்வும், தனது நாவல்களில் அவர் கையாளும் குழந்தை உள்ளம் படைத்த பாத்திரங்களும்தான். மனிதர்களின் ஆசாபாசங்களைச் சொல்லாமல் சொல்லி எள்ளி நகையாடும் மெல்லிய தன்மைகளுமேயாம். அவர் இந்தியாவின் சிறந்த நண்பர். அவர் காந்திஜி, தாகுர் இவர்களின் நண்பராக விளங்கி, இந்திய மக்களின் அன்புக்குப் பாத்திரமான தீனபந்து ஆண்ட்ரூஸ் போன்று இலக்கியத்றையில் இந்திய மக்களின் நல்ல தன்மைகளையும், அவர்களின் அரசியல். சமூக ஆர்வங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் 'இந்தியாவுக்கு ஒரு பயணம்' என்ற நாவல் எழுதி இந்திய மக்களின் நல்லுறவுக்குப் பாத்திரமானவர்.

போர்ஸ்டரின் நாவல்களையும், மற்ற இலக்கியக் கட்டுரைகளையும் படித்தவர்கள் அவருடைய விரிந்த மனப்பான்மையும், யாவருக்கும் தீங்கு எண்ணு வாழ்க்கை முறைகளையும் அவருடைய இலக்கிய உருவகங்கள் காட்டுவதை அறிவார்கள். அவரின் இளம்பருவம் மிகவும் முக்கியமனதல்ல. அவர் 1879 ஆம் ஆண்டு இங்கிலாந்தின்

பெயர் பெற்ற மேதாவிகளின் குடும்பத்தில் பிறந்தவர். டான்பிரிட்ஜ் என்ற பெயர் பெற்ற உயர்நிலைப்பள்ளியி லும், கேம்பிரிட்ஜில்உள்ள கிங்ஸ் காலேஜிலும் படித்தவர். இவருடைய கேம்பிரிட்ஜ் பருவத்தில் இவர் கேம்பிரிட் ஜில் அப்போது பெயர் பெற்று விளங்கிய சிந்தனையாள ரான லோவஸ் டிக்கின்சன் என்பாரின் கருத்துக்களா லும், நட்பாலும் 'லிபரல் தத்துவம்' என்னும் சுதந்திர உணர்ச்சிமிக்க வாழ்க்கைக் கொள்கையில் மிகவும் ஆர் வம் கொண்டார். நேருவின் சுயசரித்திரத்தைப் படித்த வர்கள் நேருவின் கேம்பிரிட்ஜ் காலத்தில் எவ்வாறு லோவஸ் டிக்கின்சன் கருத்துக்கள் மாணவர்களால் விவாதிக்கப்பெற்றன என்பதை அறிவார்கள். போர்ஸ் டர், டிக்கின்சனுடைய அனுபவத்தால் தனது இலக்கிய சக்திகளை மிகவும் உன்னத முறையில் பிற்காலத்தில் வெளிப்படுத்த முடிந்தது. போர்ஸ்டருடைய இலக்கிய வாழ்க்கைக்கு முக்கியமான நிகழ்ச்சிகளாக அமைந்தவை அவர் இந்தியாவுக்கு மூன்று தடவை பயணம் செய்ததே யாகும்

சமீபத்தில் அவர் ஆக்ஸ்போர்டு மஜ்லிஸ்—சங்கத் தில் தமது இந்தியப் பிரயாண அனுபவங்களை விளக்கிக் கூறினர். இப்பிரயாணங்கள் அவருடைய இலக்கியப் படைப்புகளை மட்டுமல்ல, அப்படைப்புக்களின் விரிந்த மனித அபிமானங்களை வெளிப்படுத்தும் கருவிகளாக அமைந்தன என்பது இந்தியர்களான அனைவருக்கும் பெருமைதரும் சேதியே யாகும்.

இந்து முஸ்லிம் உறவில் அவர் மிகவும் அக்கறை உள்ளவர். அவருடைய வாழ்க்கையும் இதற்குச் சாதக மாக அமைந்தது. அவர் இந்தியாவுக்கு முதன் முதலாகச் சென்றது 1912ஆம் ஆண்டில். அதற்குக் காரணமாக

இருந்தது மசூத் என்னும் முஸ்லிம் நண்பரை அவர் ஆக்ஸ் போர்டில் சந்தித்ததேயாகும். அச்சந்திப்பைப்பற்றி அவர் நகைச் சுவை ததும்ப மஜ்லிஸ் நண்பர்களுக்கு விளக்கினுர். மசூத்தின் முன்னோர்கள் அலிகார் பல்கலைக் கழகம் நிறுவிய முஸலிம் பெரும்குடி மக்கள். மசூத் ஆக்ஸ்போர்டுக்கு வந்ததும், அவருக்கு லத்தீன் மொழி தெரியாது என்ற காரணத்தால் ஆக்ஸ்போர்டில் இடம் கொடுக்க மறுத்து விட்டது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம். ஆகவே, மசூத் லத்தீன் மொழியைப் படித்து ஆக்ஸபோர்டில் தங்குவதாக முடிவு செய்தார். லத்தீன் மொழியைச்சொல்லிக் கொடுக்க மசூத் ஆள்தேடிக்கொண்டிருந்தார். மசூதுக் குலத்தீன் சொல்லிக்கொடுத்த ஆசியர்தான் போர்ஸ்டர், மசூத் நியூகாலேஜில் தங்கியிருந்த போது போர்ஸ்டருக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. மசூத் இந்தியா திரும்பியதும் போர்ஸ்டரை இந்தியாவுக்கு வருமாறு அழைத்தார்.

போர்ஸ்டர் அச்சமயத்தில் ஜி எம். ட்ரெவெல்யான் (பிறப்பு. 1876. லார்டு மெகாலே என்னும் சரித்திர ஆசிரியரின் பேரனுர்) என்பாருடன் "இண்டிபென்டன்ட் ரெவ்யூ" என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி அதில் எழுதிக்கொண்டிருந்தார். 1912ஆம் ஆண்டில் போர்ஸ்டர் முதன் முதலாக, அவர் சொன்னதுபோல தனது முஸ்லிம் பயணத்தை லோவஸ் டிக்கின்சன், ஒட்டோ ட்ரெவெல்யான் ஆகியோருடன் மேற்கொண்டார். மஜிலிஸில் அவர் சொன்னதாவது: நான் இந்தியாவுக்குச் சென்றது சொந்தமான விஷயம்; நான் மற்றவர்களைக் கட்டியாளச் செல்லவில்லை; பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் செல்லவில்லை; யாரையும் திருத்தும் நோக்கமும் எனக்கு இருந்ததில்லை!". இப்பயணத்தால் அவர் கண்ட ஓர் உண்மை என்னவென்றல், இந்திய மக்களுக்கு

ஆங்கில அதிகார வர்க்கத்துக்கும் இடையே ஒரு வித மான அமைதியில்லா உணர்ச்சி பிரதிபலிப்பதை முதன் முதலாக அறிய முடிந்ததேயாகும். 'இந்தியாவுக்கு ஒரு பயணம்' என்ற நூலை எழுதத் தூண்டுகோலாக இருந் தது இந்த உணர்ச்சியே யாகும். மசூத்தோடு பங்கிம்பூர் ஹைதராபாத் முதலிய நகரங்களுக்குச் சென்றார். பங்கிம் பூர் இந்தியப்பயணம் என்ற நாவலில் சந்திரப்பூர் என் றும், அவர் நண்பர் மசூத் டாக்டர் அஜிஸ் என்றும் வருவதை நண்பர்கள் இப்போது அறிந்து கொள்ளலாம்.

அவருடைய இரண்டாவது பயணம் 1922ஆம் ஆண் டில். இதை அவர் இந்துவின் பயணம் என்று அழைக்கி ரார். இம்முறை அவர் இந்தூருக்கு அருகே தேவாஸ் என்ற சமஸ்தானத்தின் மகாராஜாவுக்கு காரியதரிசி யாக உதவி செய்ய வேண்டிச் சென்றார். மகாராஜா வுக்கு ஆங்கில இலக்கியத்தைப் படித்துக் காட்டுவது, அவருடன் தத்துவப் பிரசங்கங்கள் புரிவது இவையே போர்ஸ்டரின் காரியமாக இருந்தனவாம். இம்முறை அவர் இந்திய மக்களைப் போலவே உடை உடுப்பதும், செருப்பு இல்லாது வெறும் காலால் நடப்பதும், இந்திய விழாக்களில் பங்குகொள்வதும் அவருக்குப் பிரியமாக இருந்தனவாம். அவருடைய இரண்டாவது பயண அனுப வங்களைத் "தேவியின் பர்வதம்" என்ற நூலில் வெளியிட் டுள்ளார்.

மூன்றாவது பயணத்தில் (1945) பி. இ. என். எழுத் தாளர் மகாநாட்டில் பங்குகொள்ள ஜெயப்பூருக்குச் சென்றிருந்ததாகக் கூறினார். இப்பயணத்தை மாடர்ன் பயணம் என்று வேடிக்கையாகக் கூறினார். மஜ்லிஸில் உள்ள அனைவரும் மாணவர்களாதலால் அவருடைய அனுபவங்கள் பழையகாலத்து விஷயங்கள் என்று

தள்ளிவிட வேண்டாம் என்றும், அவருக்கு அவைதான் மிகவும் முக்கியமான அனுபவங்கள் என்றும் கூறினர். 1945ஆம் ஆண்டில் இந்தியாவில் எங்குப் பார்த்தாலும் அரசியல் உணர்ச்சி கொந்தளித்து விளங்கியதாகவும், தான் முதன் முதலில் பிரிட்டிஷ் மக்கள் இந்திய மக்களோடு எவ்வித உறவு கொள்ள வேண்டும் என்று நினைத்த நினைவுகள் நனவாக இருப்பதைக்காண அக மகிழ்ந்ததாகவும் கூறினர். ஆனல் இந்த அரசியல் உணர்ச்சிகள் இலக்கிய ஆசிரியர்கள் உள்ளங்களிலும் புகுந்து இலக்கியத்தை அரசியல் கருத்துக்களை வெளியிடும் ஒரு விளம்பரப் பலகையாக கருதும் தன்மை நல்லதல்ல என்றுதான் பேசியதாகவும் கூறினர். இந்தியா என்ருல் இந்துக்களும், முஸ்லிம்களும் கூடிவாழும் ஒரு பெரும் தேசமாகவே நினைத்ததாக போர்ஸ்டர் கூறினர்.

போர்ஸ்டருடைய பெருந்தன்மையை ஆங்கில மக்கள் இன்று போற்றுகிருர்கள். அவர் குடியரசில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். இந்திய மக்கள் சுதந்திர உணர்ச்சியும், அரசியலில் சமாதான மன்பான்மையும் நிறைந்து விளங்குபவர்கள் என்று அவர் நம்புகிருர். இன்றும் இந்தியர்களைச் சந்திப்பதிலும், இந்தியப் பிரச்னைகளை விவாதிப்பதிலும் அவர் மிகுந்த திருப்தி அடைகிருர். அவருடைய இந்தியப் பயணம் என்ற நாவலை நாடகமாக மாற்றி அமைத்தவர் இந்தியப் பெண்மணியான சாந்தா ராமராவ். இந்நாடகம் இப்போது ஆக்ஸ்போர்டில் மிகவும் வெற்றிகரமாக நடைபெறுகிறது.

போர்ஸ்டர் எழுதி உள்ள நூல்கள் சொற்பம். ஆனல் இச்சில நூல்களால் இப்பெரும் புகழ்பெற்று விளங்கும் பாக்கியம் அவர்கள் வாழ்நாட்களிலேயே போர்ஸடரைப்

போல வேறு ஓர் இலக்கிய ஆசிரியருக்கும் வாய்த்த தில்லை.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் போற்றிப் புகழ்ந்து இலக்கியம் படைத்து நோபல் பரிசு பெற்று விளங்கிய ஆங்கில ஆசிரியர் கிப்ளிங். ஆனல் ஆங்கிலேயர்களின் சாம்ராஜ்ய, இனமனப்பான்மைகளை எள்ளி நகையாடி இலக்கியம் படைத்தவர் போர்ஸ்டர். கிப்ளிங்கை ஆங்கில மக்கள் இன்று மறந்து விட்டனர். ஆனல் தங்கள் இலக்கியத்தின் சொத்து என்று ஆங்கில மக்களே போற்றும் வண்ணம் அவர்களின் அன்புக்குப் பாத்திரமாக விளங்குகிருர் போர்ஸ்டர்!

அணுகுண்டு சாதித்தவை

சி. இ. எம். ஜோட்

அணுகுண்டு முக்கியமாக ஒரு காரியத்தைச் சாதித்திருக்கிறது. போரின் மீதிருந்த மோகத்தை அது ஒழித்துவிட்டது.

"மனிதனின் உயர்ந்த பண்புகளுக்கும் திறமைகளுக்கும் யுத்தமே அடிப்படை" என்று ரஸ்கின் கூறினர். இனி யாரும் அப்படிப் பேச முடியாது. நம் காலத்தில் கூட இதே மாதிரி நடந்து வருகிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன், அபர்டீன் பல்கலைக் கழக மாணவருக்கு நிகழ்த்திய தமது தேர்தல் பிரசங்கத்தில், சர். ஆர்தர் கீத் பின் வருமாறு கூறினர் :

"ஒரு தோட்டத்தில் செடி கொடிகளிடையே வேண்டாத வளர்ச்சியை வெட்டி எறிவதன் மூலம் தோட்டக்காரன் அவற்றின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி செய்கிருன். அதேபோல இயற்கையும் தேவையில்லாத வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மனித சமுதாயமாகிற தோட்டத்தை ஆரோக்கிய நன்னிலையில் வைத்திருக்கிருள். யுத்தம் என்கிற கருவி மூலம் இயற்கை இந்த வேலையைச் செய்து முடிக்கிருள். அவளுடைய சேவைகள் வாழ்விற்கு இன்றியமையாதனவாகும்."

வாழத் தகுதியற்றவரை அழித்து ஒழிப்பதன் மூலம் யுத்தம் உயிர் நூல் முறைப்படி உபயோகமான ஒரு காரி

யத்தைச் செய்கிறது என்று இனி எவருமே சொல்ல முடியாது என்று கருதுகிறேன்.

"இருபது வருஷங்களுக்குள் என்னென்ன நிகழப் போகிறதோ?" என்று பூமிக்கடியில் ஓடும் ரயில்வேயில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி திகைத்தானும். உண்மையில் மக்கள் மனத்தில் இத்தகைய திகைப்பே குடி கொண்டிருக்கிறது. எத்தனை நாளைக்கு இந்த மாதிரி இருக்கப்போகிறது? அதிக நாளைக்கு இல்லை என்றே எண்ணுகிறேன்.

சந்தர்ப்பத்திற்கேற்ப மனம் அனுசரித்துக் கொள்கிறது. முக்கியமாக அதிர்ச்சி, பயம்-இவற்றைத் தாங்கும் சக்தியும் அதிவிரைவில் குறைந்து போகிறது. செய்திப் பத்திரிகைகள் தங்கள் சிந்தனைகளில் தேசத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. கணித வாக்கியத்தைப் பிரதானமாக வைத்து எண்ணுவது அவற்றின் இயற்கைக்கு மாருகத் தோன்றுகிறது. விரைவில் அவற்றின் போக்கிலே மாறுதல் ஏற்படலாம். பத்திரிகைகள் இன்று பொதுஜன அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றன. இந்தப் பழக்கத்தைக் கைவிட்டு, பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கவும், தலைமை தாங்கி மிகவும் மாருன ஒரு நிலைக்கு அதனை நடத்திச் செல்லவும் பத்திரிகைகள் முன்வரலாம்.

அணு குண்டை உபயோகித்தால், அதுவே உலகத்தின் முடிவாக இருக்கும். இந்த முடிவை வருங்காலத்தைச்சேர்ந்த ஒரு சரித்திர ஆசிரியனின் வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கிறேன். அந்தச் சரித்திர ஆசிரியன் வேருெரு கிரகத்தைச் சேர்ந்தவனுக இருப்பது நல்லது. செவ்வாய் மண்டல வாசிகளின் சரித்திரத்திலிருந்து

ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். இந்தச் சரித்திரம், செவ்வாய் மண்டல வாசிகள் பூமியில் குடியேறிப் பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப் பெற்றதாகும். அதில் உள்ள விவரம் வருமாறு:

''நமக்கு அருகிலுள்ள பூமி மண்டலத்தில் உயிர் வகைகளின் பரிணமத்தில் 'ஊர்வன' போய், 'நடப்பன' தோன்றியிருந்தன. அவற்றில் 'மூளை படைத்த மனிதர்கள்' ஒரு பகுதி யாகும். பிற உயிர் வகைகளைவிட இவர்கள் உடல் வலுக்குறைந்தவர்கள். உயிர் நூல் பூர்வமாகச் சங்கடம் நிறைந்த காலத்தில் இவர்களுடைய சந்ததியினர் செயலற்றிருந்தார்கள். உயிர்த்திருப்பதற்குச் சாதகமான நிலையில் இல்லாததால், தட்ப வெப்பங்களின் தீவிரங்களிலிருந்து தப்ப, மற்ற மிருகங்களின் தோலை இவர்கள் ஆடையாக அணிந்து கொண்டனர்.

''ஆனால் இவர்கள் தந்திரம் மிகுந்தவர்கள். இருண்ட மனம் படைத்த நம் எழுத்தாளர், இதற்கும் நம் அறிவிற்கும் ஏதோ ஒற்றுமை இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த மனிதர்கள் தங்கள் சாமர்த்தியத்தால், பூமியின் எஞ்சிய பகுதி முழுவதும் தங்களுடைய ஆதிக்கத்தை பூரணமாக நிலைநிறுத்திக் கொண்டார்கள். இதர உயிர் வகைகளை வேட்டையாடத் தம் ஆதிக்கத்தை இவர்கள் உபயோகித்துக் கொண்டார்கள். விளையாட்டு என்பதற்காக உயிர் வகைகளை வேட்டையாடினார்கள். பிற உயிர்களைக் கொல்லுவதுதான் உயர்ந்த வாழ்வு என்று ஆண்கள் கருதினார்கள். பொய்க் கௌரவத்திற்காகவும் வேட்டையாடினார்கள். பெண்களோ, பிறஉயிர்களின் தோல்களையும், சில சமயங்களில் அவற்றின் உயிரற்ற உடலையும் உடையாக அணிந்துகொண்டார்கள் தங்கள் உடற்கவர்ச்சியை அதிகரிக்கவே அவர்கள் அப்படிச் செய்தார்கள்.

"இந்த மனிதர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். ஆனல் இவர்கள் எப்போதும் சச்சரவு செய்துகொள்ளும் இயல்புடையவர்கள். பரஸ்பரம் சச்சரவுகளிலும், சண்டைகளிலும் ஈடுபட்டு இவர்கள் தங்கள் சக்தியை எல்லாம் நாசம் செய்து வந்ததால் பலவீனமடைந்தார்கள். இல்லாவிடில், பூமியில் வேறுவித உயிர்களின் புல்பூண்டே இல்லாது இவர்கள் அழித்து விட்டிருப்பார்கள்.

"அணுவில் அடைந்து கிடக்கும் சக்திகளை வெளிப்படுத்தும் புதுமையை மனிதன் கண்டு பிடித்தான். மனித ஆதிக்கத்துக்கு அதுவே உலைவைத்து விட்டது. மனிதன் இந்த மகத்தான சக்தியைத் தன்னையே அடியோடு அழித்துக்கொள்ள உபயோகித்துக் கொண்டான்".

எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு சரித்திராசிரியர்கள் முடிப்பது வழக்கம். நானும் அவர்களுடைய முறையையே பின்பற்ற விரும்புகிறேன்.

"பிரபஞ்சத்தில் இறைவனுடைய அருளாட்சி நடக்கிறது என்பதற்கு, தன் துஷ்டத்தனத்தினலேயே அழிந்துபோன மனிதர்களின் கதையைச் செவ்வாய் மண்டலப் பூசாரிகள் அடிக்கடி உதாரணமாக எடுத்துக் காட்டுகிறுர்கள்."

வேலை தேடித்தரும் சீரிய பணி

பிரிட்டனிலுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள் (எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சஸ்) சென்ற ஐம்பதாண்டு களில் சுமார் பத்துக் கோடிப் பேர்களுக்கு வேலை தேடித் தந்திருக்கின்றன. தொடக்க நிலையில் இவை ஒரு சில தொழிற்-சங்கவாதிகளின் அவநம்பிக்கைக்கும், ஒரு சில தொழிலதிபர்களுடைய வெறுப்புக்கும் ஆளாக நேரிட்டது. இரண்டு உலகப்போர்களுக்கிடையிலுள்ள காலத்தில், குறிப்பாக 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு பொருளாதார மந்தமேற்பட்டபோது, இவை மகத்தான சோதனைகளை எதிர்த்து நிற்க வேண்டிதாயிற்று.

பிரிட்டனில் மக்கள் முயற்சியால் கல்வி சுகாதார நிலையங்கள் தோன்றித் தழைத்ததைப் போலவே, வேலை தேடித் தரும் நிறுவனமும் தோன்றிற்று. 1885ஆம் ஆண்டில் நதேனியல் கோஹன் வேலை வாய்ப்புத் தக வல்களைக் கூற ஓர் நிலையத்தை அமைத்தான். பிற்காலத் தில், இம்மாதிரித் தகவல் நிலையங்களை ஸ்தல ஸ்தாப னங்களில் நிறுவ அனுமதி கிடைத்தது. பிறகு அரசாங் கமே இந்தப் பணியை ஏற்றுக்கொண்டது.

ஆரம்ப காலத்தில் தொழிற்சங்கங்கள் இந்த முயற் சிக்கு ஆதரவு காட்டியதுடன் தொழிலாளர் நலனைக் காக்கும் முறையில் செயலாற்றத் தொடங்கின. ஒரு சில சங்கங்கள், தொழிற் திறனுள்ள உறுப்பினர் குறிப்புப் பட்டியல் தயாரித்துக்கொண்டு, சங்கம் நிர்ண யித்துள்ள கூலி விகிதத்தை ஏற்றுக்கொள்ளும் முதலாளி

களுக்கு, வேலையற்றிருக்கும் ஆட்களை அனுப்பி வந்தன. நாளாவட்டத்தில் வேலை தேடித்தரும் நிறுவனங்களுடைய பணி விரிவடைந்தது. ஒவ்வோர் நிறுவனத்திலும் வேலை வாய்ப்புக்களைக் கவனித்துத் தகுந்தவர்களைச் சிபாரிசு செய்வதற்காக ஓர் குழு நியமிக்கப்பெற்றது. இதில் அந்தந்த வட்டாரத்திலுள்ள தொழிலதிபர்களுடைய பிரதிநிதிகளும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்றார்கள்.

முதல் உலகப்போர் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு வேலை தேடித்தரும் நிறுவனங்களுக்குச் சோதனை காலம் தொடங்கிற்று. நாட்டில் வேலையற்றிருப்போர் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கில் பெருகிற்று. வேலையற்றிருப்போருக்கு உதவ, அரசாங்கம், மான்யத்திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்ததால் அவர்கள் வறுமையில் சிக்கிக்கொள்ளவில்லை. ஆனால் அரசாங்கம் அளக்கும் 'அமுதுபடி' கொஞ்சமாகவிருந்தாலும் அதை வாங்குவதில்சிக்கல் இருந்தது. தனக்குவேலைசெய்யும்திறமையுண்டு, விருப்பமுண்டு ஆனால் வேலைகிடைக்கவில்லை என்பதை மெய்ப்பித்தால்தான், ஒருவனுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். வேலை தேடித்தரும் நிறுவனங்களிடமிருந்து (வேலை தேடியும் இதுவரையில் கிடைக்கவில்லை) என்று சான்று பெற்றவர்களுக்கே 'அமுதுபடி' கிடைத்தது. இந்தச்சான்றிதழ் பெறுவதற்காக ஒவ்வோர் நகரத்திலும் வேலை தேடித்தரும் நிறுவனங்களின் முன்பு மக்கள் சாரிசாரியாக நிற்கலானார்கள். கால் கடுக்க நிற்கும் மக்களைக் கண்டு நிறுவன அதிகாரிகள் அலுப்படைந்ததுமுண்டு.

இரண்டாம் உலகப்போர் மூண்டதும் நிலைமை மாறிற்று. வேலை தேடித் தரும் நிறுவனங்கள் ராணு

வத்திற்கு ஆள் திரட்டும் பொறுப்பை ஏற்றன. போர்க் கால மந்திரி சபையில் தொழிலாளர் நல மந்திரியாகப் பதவியேற்ற தொழிற் சங்கத் தலைவர் எனஸ்டு பெவின் வேலை தேடித்தரும் நிறுவனங்களைத் திருத்தி அமைத்தார். ஒவ்வொருவருடைய ஆற்றலையுமறிந்து ஏற்ற பணி யளித்துப் போர் முயற்சிக்கு உதவ வேண்டும் என்று பணித்தார்.

போர் முடிந்ததும் கலைக்கப்பட்ட படைகளைச் சேர்ந்தவர்களுக்கு வேலை தேடித்தரும் மாபெரும் பொறுப்பை, இந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டு திறம்படச் செயலாற்றின. வேலை தேடி வருவோருடனும் தொழிற்சாலைகளுடனும் தொடர்பு கொண்டு, சீரிய முறையில் பணியாற்றின,

இன்று வேலை தேடித்தரும் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி தம்மைக் காண வருவோரை இன்முகத்துடன் வரவேற்கிறார். தனிமையில் பேசித் தகவல்களைக் கேட்டு தெரிந்துகொள்கிறார். இன்று தொழிற்சாலைகள் ஆள் குறைப்புச் செய்ய விரும்பினாலும், உற்பத்தியைக் குறைக்க விரும்பினாலும் வேலை தேடித்தரும் நிறுவனங் களுக்கு, முன்னதாகவே தெரிவித்து விடுகின்றன. இதனால், வேலையிழக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேறு இடங்களில் வேலை தேடித்தர நிறுவன அதிகாரி களுக்குப் போதுமான அவகாசம் கிடைக்கிறது.

சில சமயங்களில் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி கள் தொழிற்சாலைக்கே சென்று, தொழிலாளர்களைச் சந்தித்து, தகவல்கள் சேகரித்து வருவதுமுண்டு. இதனால் தொழிலாளர்களுக்கு நேரமும் பணமும் மிச்ச மாகிறது.

பிரிட்டனிலுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள் —இப்போது சுமார் ஆயிரம் உண்டு- -சில விசேஷப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக, உடல்நலிவு அல்லது ஊனமேற்பட்டதால் தொழிற்சாலையைவிட்டு வெளியேறும் தொழிலாளருக்கு மாற்றுவேலை தேடித்தரும் நற்பணியை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வோர் நிறுவனத்திலும் நலிவுற்ற தொழிலாளருக்கு ஆலோசனைகளைக் கூறவும் உதவி தரவும் ஓர் அதிகாரியுண்டு. இதனால் ஒவ்வோர் ஆண்டிலும் சுமார் பத்தாயிரம் பேர்கள் நன்மை பெற முடிகிறது. தொழிற்சாலைகளில் சேர விரும்பும் இளைஞர்களுக்கும், கலைக்கப்பட்ட படைகளைச் சேர்ந்த வீரர்களுக்கும், அவரவர் ஆற்றலுக்கும் விருப்பத்திற்குமேற்ற வேலைகளைத் தேடுவதற்காக சில விசேஷ அதிகாரிகள் நாட்டின் பல பகுதிகளில் பணியாற்றுகிறார்கள். சரிவர ஆங்கிலம் பேச முடியாத வெளிநாட்டு அகதிகளுக்கும், சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கும் வேலை தேடித்தரும் பொறுப்பை சில அதிகாரிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேலை தேடித்தரும் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், சமுதாயப் பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் செயலாற்றுவதால், மக்கள் அவர்களை நம்பிக்கையுடன் அணுகுகிறார்கள்.

கௌசாம்பி

அலகாபாத்துக்குத் தென்கிழக்கே 32 மைல் தூரத்தில் யமுனை நதிக் கரையில் அமைந்துள்ளதும், பாண்டவர்களின் பழங்காலத் தலைநகரமும் ஆன கௌசாம்பியில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அவை புராதன இந்தியாவில் கோட்டை கொத்தள அமைப்புகள் பற்றிய பிரச்னைகள் சம்பந்தமாகப் புதிய தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றன.

மத்திய தேசத்தைச் சேர்ந்த மக்கள், வெகு காலத்துக்கு முன்னமேயே அதாவது கி. மு. ஆயிரம் ஆண்டு ஆரம்பத்திலேயே சிக்கலான பாதுகாப்பு அமைப்புள்ள கோட்டை கொத்தளங்களை நிர்மாணிப்பதில் வல்லமை பெற்றிருந்தனர் என்று இந்தக்கண்டு பிடிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. மேலும் கங்கை சமவெளிப் பிரதேசத்தில் அவர்கள் முதலில் அமைத்துக்கொண்ட நகரங்களும் கோட்டை கொத்தளங்களும், ஹரப்பா கலாசார அமைப்பைக் கொண்டதாக, ஆனல் புதிய கருத்துக்களுக்கு புதிய இடங்களின் சூழ்நிலைக்கும் ஒத்தவாறு சில மாறுதல்களுடன் கட்டப்பெற்றதாகவும் தெரியவருகிறது.

இந்தப் புதைபொருள் ஆராய்ச்சிகள் அலகாபாத் சர்வகலாசாலையின் புராதன சரித்திர, காலசார, கட்டிடக் கலை இலாகாவால் நடத்தப் பெற்றது.

கௌசாம்பியில் பிரதான பாதுகாப்பு அமைப்புகளில் நடத்தப்பெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள் பின்வரும் அம்சங்களை வெளிப்படுத்தியுள்ளன. பிரதான

பாதுகாப்பு அரண்கள், சரிந்த பக்கவாட்டுடன் சேற்றி ஞல் அமைக்கப் பெற்றதாகவும், வெளிப்புறத்தில் கீழ்ப் புறத்தில் அகலமாகவும், மேலே செல்லச் செல்லக் குறுக லாகவும் சரியான அமைப்புள்ள சுட்ட செங்கல்லினுலான சுவரில் பலப்படுத்தப்பெற்றும் அமைந்திருந்தன. செங் கல் சுவர்களின் 'அமைப்பில் அடுக்குகள் மாறிமாறி குறுக்கும் நெடுக்குமாக வைக்கப்பெற்றிருந்தன. சுரங் கப் பாதைகளும், சாக்கடைகளும் கமான் அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பெற்றி ருந்தன. பக்கவாட்டுச் சுவர் இடை இடையே கொத்த ளங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

கௌசாம்பியில் இவ்வெல்லா நிர்மாண அமைப்பு களிலும் சிந்து நதி தீர நாகரிகத்தின் சாயல்கள் காணப் பெற்றன. கங்கை சமவெளிப் பிரதேசத்தில் முதல் முத லாகக் கட்டப்பெற்ற நகரங்கள் அனேகமாக, சிந்து நதி தீர கலாசாரத்தை முன்மாதிரியாகவும். லட்சியமாகவும் கொண்டிருந்தன என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

கௌசாம்பி பாதுகாப்பு அமைப்புகளில், சிந்து நதி தீர நகரங்களில் காணப்படாத சில அதிகப்படியான அம் சங்களும் காணப்பெறுகின்றன. பிரதான பாதுகாப்பு அமைப்புகளைச் சுற்றிஉம், சுமார் 400 அடி அகலமும் 28 அடி ஆழமும் கொண்ட மிகவும் பரந்ததொரு அகழி அமைப்பு குறிப்பிடத்தக்கது. பிரதான வாயிலின் முன் புறத்தில், இந்த அகழி ஒரு பாதையினுல் மூன்று பகுதி களாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. இப்பாதை, ஐந்து காலங்களில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. மண் படிவ அமைப்புகளின் ஆராய்ச்சியைக் கொண்டு இவற் றில் ஆரம்ப காலத்து சாலையும், அகழியும் சுமார் கி. மு. 800ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும் என்று கூறலாம்.

அகழியின் வெளிப்புறத்தில் காவல் கண்காணிப்புக் கான கோபுரமொன்று இருந்தது. இந்த கோபுரத்தின் மேலிருந்து சாலையையும் பாதுகாப்பு அமைப்புக்குள் செல்லும் பிரதான வழியையும் பார்க்கலாம். அகழிக் கும் பாதுகாப்புச் சுவருக்கும் இடையே துணைப் பல மாக மதில் சுவர் ஒன்று இருந்தது. இந்த மதில் சுவர் பிரதான மதில் சுவரைப் பாதுகாப்பதற்கும், அச்சுவர் தூர்ந்து போய்ச் சரிந்து விடாமல் காப்பதற்கும் இரு வகையில் பயன்பெற்றது.

கௌசாம்பியில் சமீபத்தில் மேற்கொள்ளப்பெற்ற புதைபொருள் ஆராய்ச்சி கி.மு. மூன்றுவது இரண்டா வது நூற்றுண்டு ஒரு முக்கிய சகாப்தமாகத் துவங்கியது என்பதையும், அக்காலங்களில், பாதுகாதுப்பு அரண் அமைப்பில் புதிய கருத்துக்கள் புகுத்தப்பெற்றன என்ப தையும் தெள்ளென எடுத்துக்காட்டுகின்றன. பககவாட்டுத் துணைச் சுவர் அமைப்பு உள்ள பழைய ஹரப்பா அமைப்பு மாதிரிகள் கைவிடப்பெற்றன. இப் பொழுது பல்வேறு முனைகளில் காவல் அறைகளுடன் அடுத்தடுத்து ஓடும் நீண்ட சுவர் அமைப்புகளும், பிர மாண்டமான காவல் கோபுரங்களும் அவற்றுக்குச் செல் லும் படியமைப்புகளும் பாதுகாப்பு அமைப்புகளின் உட் கருவாக அமைந்திருந்தன. இந்தப் புதிய பாதுகாப்பு அமைப்பு கௌடில்யரினுல் வர்ணிக்கப்பெற்றுள்ளதைப் போன்றதாகவே கிட்டத்தட்ட உள்ளது.

இந்தப் புதைபொருள் ஆராய்ச்சிகள், புருஷமேதத் தில் கூறப்பெற்றுள்ள பருந்து அமைப்புள்ள பலிபீடமான ஸ்பேன-சிதி பற்றிப்புதிய தகவல்களையும் வெளிப்படுத்தி யுள்ளன. ஆராய்ச்சி நடவடிக்கைகளில் இங்கு மனிதர் பலி கொடுக்கப்பெற்று வந்ததற்கான தடயங்கள் கண்டு

பிடிக்கப்பெற்றன. அக்கினி பலி பீடத்தின் (அக்கினி -சிதி]'நிர்மாணத்துக்காகப் பெரியதொரு குழி தோண்டப் பெற்றிருந்தது.

முதலாவதுநாள் பலி கொடுக்கப்பெற்ற பிராணியின் எலும்புகளும். குழியின் அடியில் வைக்கப்பெற்றிருந்த பாத்திரங்களும் வெளிப்பட்டன. மற்றும் கர்ஹயபத்ய ஹோமகுண்டமும் அதன் பலி பீடமும்-(வேதிகா)வெளிப் பட்டன. பலிபீடம் (சிதி) அடித்தள அமைப்பையும் (ஸ்தண்டிவ) அதன்மேல் பருந்து உருவத்தில் அதன் அலகு, கழுத்து, இறகுகள், வால் பகுதி ஆகியவற்றின் அமைப்பைக் கொண்டதாக இருந்தது. இப் பருந்து அமைப்பின் உடற்பகுதியிலும் அதன் வால்பகுதியிலும் ஐந்து அடுக்குகளில் பிராணிகளின் எலும்புகளும், மனித எலும்புகளும் காணப்பெற்றன. இந்த ஆராய்ச்சிகளிலி ருந்து வெளியான விவரங்கள், வாஜிஸானேயி சம்ஹிதா, சதபத பிரமாணம், காத்யாயன, ஸ்ரௌதசூத்ர போன்ற நூல்களில் புருஷமேதத்துக்கான அக்கினி-சாயனம்பற்றி விவரிக்கப்பெற்றுள்ள வர்ணனை விவரங்களை நெருங்கி அனுசரித்த வகையில் உள்ளன.

பாதுகாப்புச் சுவருடன் சேர்ந்தாற்போல கண்டு பிடிக்கப்பெற்றுள்ள மண்பாண்டங்கள் கங்கைசமவெளிப் பிரதேசத்தின் இப்பகுதியில் முதலாவது கலாசாரக் கட் டம் சம்பந்தமான மிகவும் முக்கியமான தகவல் விவரங் களைத் தந்துள்ளன. இந்த மண்பாண்டங்களை நான்கு தனிதனித் தொகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது தொகுதி உறுதி வாய்ந்த சிவப்பு வர்ண மண்பாண்டங் களில் அவற்றில் சிற்சில இடங்களில் கரிய வர்ணத்தில் ஓவியங்கள் வரையப்பெற்றிருந்தன. இவை இந்தியாவின் செப்பு-பித்தளை காலப் பரம்பரைச் சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

இரண்டாவது தொகுதி மண்பாண்டங்கள் கருநிற முள்ள செந்நிறமும் கூடிய மண்பாண்ட ரகங்கள் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிற மண்பாண் டத்தொகுதியைச் சேர்ந்தனவாகும். மூன்றாவதுதொகுதி மண்பாண்டங்கள், ஓவியந் தீட்டப்பெற்ற சாம்பல்வர்ண மண்பாண்ட ரகத்தைச் சேர்ந்தவையும், நான்காவது தொகுதி கௌசாம்பி, அஹிச்சத்திரா, மத்துரா ஆகிய விடங்களிலும் மற்றும் கங்கை சமவெளிப் பிரதேசத்தின் இதர இடங்களிலும் உள்ள ஆரம்ப கால செந்நிற மண் பாண்ட ரகங்களுக்கு மூல ரகமான செந்நிறமுள்ள மண் பாண்ட ரகத்தைச் சேர்ந்தவையும் ஆகும்.

கி. பி. 2000 ஆண்டு கால இறுதியையும் கி. பி. 1000 ஆண்டு கால ஆரம்பத்தையும் சேர்ந்த காலத்தில்,கங்கை சமவெளிப் பிரதேசத்தில் ஆரம்ப கால கலாசாரம், ஒரு கூட்டுக் கலாசாரமாக இருந்ததென்றும். ஆரியர்கள் அதில் ஆதிக்கம் வகித்துவந்த சிறுபான்மையினராக இருந்து வந்தனரென்றும், மற்றும் அது சிந்துநதி தீர கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததென் றும் கௌசாம்பியில் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள இந்த மண்பாண்டங்களிலிருந்து தெரிகிறது.

சமூக இயல் கழகம்

உலகில் உள்ள முப்பது நாடுகளுக்கும் இடையே கலாசாரப் பரிவர்த்தனை நடைபெற்ருல், அதனுல் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றி அதிக நேரம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகையதொரு சோதனை தான் இன்றையத்தேவை. சர்வதேச உறவுகள் வலுவடைவதற்கு அவை துணைபுரிகின்றன. சர்வதேசக் கூட்டுறவுக்கான ஹாலந்துப் பல்கலைக் கழகம் தூண்ட, போர்டு ஸ்தாபனம் உதவி செய்ய, சமூக இயல் கழகம் 1952ஆம் ஆண்டில் சிறிய அளவில் தோன்றியது. பின்னர், பெருகி வளர்ந்தது. குறைந்த வருவாயுள்ள நாடுகளிலிருந்து ஒவ்வொராண்டிலும் குறிப்பிட்ட அளவில் இளைஞர்களையும் இளம் பெண்களையும் அழைத்து மேம்பாடு குறைந்த நாடுகளில் காணப்படும் சமூக-பொருளாதாரப் பிரச்னைகள் குறித்துக் கருத்துப் பரிவர்த்தனை செய்து கொள்ளச்செய்வதே, இந்தக் கழகத்தில் நோக்கமாகும். மாறி வரும் சமூக நோக்கத்தின் அடிப்படையில் அந்தப் பிரச்னைகளை ஆராய்வதற்கான ஏற்பாடுகளை இந்தக் கழகம் செய்து தருகிறது. பெருமளவில் வேறுபட்டுள்ள பல்வேறு தரப்பினரும் ஒருவரை ஒருவர் முழுவதும் அறிந்து கொள்வதற்கு இது வழி வகுத்துத் தருகிறது.

இந்தக் கழகம் ஈடுபட்டுள்ள சோதனை, காலம், மரபு ஆகியவற்றையெல்லாம் கடந்ததாகும். இந்தக் கழகத்தின் உறையுள், உண்மையில் ஒரு சிறு உலகமாகும். அங்கே வசிப்பவர்கள், பல்வேறு வகையான சமூகக்

கலாசார நெறிகளின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள். தமக்கே யுரிய கோட்பாடுகள், வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றுடன் அவர்கள் அங்கே வந்து சேர்கிறார்கள்; அறிவின் சிகரமாகத் தம்மைக் கருதிக்கொள்பவர்களும், முன்பு எங்கோ கேட்ட வேடிக்கைப் பேச்சுக்களைத் திரும்ப எடுத்துச் சொல்லுபவர்களும், காதற் கடவுளின் தொண்டனாக வாழ நினைப்பவர்களுமாகப் பல வகையான மக்கள் அங்கே வாழ்கிறார்கள். எனினும் அனைவர்க்கும் பொதுமான தொன்றுண்டு. உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்களுக்கு இடையேயுள்ள செயற்கை வேலியை உடைத்தெறிந்து நேசமும் அன்பும் பிணைக்க வாழும் ஒரு நிலையை நோக்கி முன்னேறுவதே அவர்கள் நோக்கமாகும். சில சமயங்களில். ஏதோ சாதாரண முறையில் ஏற்பட்ட அறிமுகங்களும், நெடுங்காலம் நீடிக்கக்கூடிய நட்பாக உருவாவதையும் அங்கே காணலாம்.

சமயம் மொழி, கோட்பாடுகள், அரசியல் நெறிகள் முதலியவற்றில் வேறுபாடு இருந்தாலும், சமுதாய ஒருமை நோக்கு அங்கே காணப்படுகிறது. பலவகைப் பட்டவரும் அங்கே சேர்ந்து வாழ்ந்து, சேர்ந்து பயின்று, சேர்ந்தே விளையாடுகிறார்கள். பிறகு, பிரியும்போது சேர்ந்து பிரிவதில்லை. ஆனால் மனித வாழ்க்கையில் முரண்பட்ட சக்திகளைச் சமாதான முறையில் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற பொது நோக்கத்தோடு அவர்கள் பிரிகிறார்கள். அநேகமாக, அவர்கள் மீண்டும் சந்திக்கப் போவதில்லை. ஆனால் அவர்கள் சேர்ந்து வாழ்ந்த அந்தச் சில மாதங்களின் நினைவு அவர்கள் நெஞ்சில் என்றும் பசுமையா யிருக்கும். 'எதை நேசிக்கிறாயோ, அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறாய்" என்ற கவி கோதேயின் எளிய கவிதையின் உட்பொருளை உணர்ந்து கொள்கிறார்கள்.

இந்தக் கழகத்தில், மணி யொலியுடன் பொழுது விடிகிறது. நெடு நேரம் வெளியில் சுற்றிவிட்டு, விடியற் காலையில் தான் கண்ணை மூடுபவர்களுக்கு இந்த மணி ஒலி ஒரு பெரிய தலைவலியாகும். அடுத்த பதினைந்து நிமிஷத் துக்குள், காலைச் சிற்றுண்டி தயார் என்பதைக் குறிக்க மற்றொரு மணி ஒலிக்கிறது. பிறகு வகுப்புகள். பத்தரை மணிக்குக் காப்பியருந்துவதற்கெனச் சிறிது இடைவேளை. சிலருக்கு இந்தக் காப்பிக்குப் பிறகுதான் பொழுதே புலர்வதுபோல் தோற்றமளிக்கும்.

ஒரு காலத்தில் அரசமாளிகை யாயிருந்த கட்டிடத் தின் விசாலமான அறைகளில்தான் வகுப்புக்களும் உரைக் கோவைகளும் நடைபெறுகின்றன. ஆபரேஷன் அறை யில் மருத்துவர் நோயாளின் உடலைக் கீறிப் பார்ப்பதைப் போல, ஒவ்வொரு நாட்டின் சமூக நிலையையும் பொருளா தார நிலையையும் இங்கே கீறிக் காண்கிறார்கள். ஒவ்வொரு வரும், அது பற்றித் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் எடுத்துக் கூற முயல்கிறார்கள்.

பன்னிரண்டே முக்கால் மணிக்கு, பகலுணவுக்காக ஒரு மணி. இந்த மணி யொலி எல்லாருடைய முகத்தி லும் ஒரு மகிழ்ச்சி ரேகையைத் தோற்றுவிக்கிறது. இங் கேயும் ஓர் ஒருமைப்பாட்டைக் காணலாம். பலவகை யான ருசியும் உணவுப் பழக்கமும் கொண்டவர்கள், பொதுவான உணவு ஒன்றை ரசித்துச் சாப்பிடுவதைப் பார்க்கலாம்.

இந்த அமளியில், தமது ஆராய்ச்சியை மறந்து விட் டார்களா என்று நினைக்கிறீர்கள்? அதனாலென்ன? ஒரு வர் கருத்தை மற்றொருவர் புரிந்து கொண்டதே போதும். அது மட்டும் சுலபமானதா?

இரவில் உணவுக்குப் பின்னர், அனைவரும் பொது அறை யொன்றில் கூடுவார்கள். தேநீர் அருந்திக்

கொண்டே எதைப்பற்றி வேண்டுமானாலும் இங்கே பேச லாம். இந்தக் கழகத்தில் பொது மொழியாகக் கருதப் பெறும் ஆங்கிலத்தைத் தவிர, வெவ்வேறு மொழிகளைச் சேர்ந்தவர்கள் தமக்குள் தத்தம் மொழியிலேயே பேசிக் கொள்வார்கள். உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பன்னிரண்டு மொழிகள் வழங்கப்பெறுகின்றன. மாணவர் சங்கம் ஏற்பாடு செய்யும் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் போது, ஒவ்வொருவரும் தத்தம் நாட்டுக்குரிய உடைகளில் தோன்றி தமது மொழியில் பாடல்களைப் பாடுவதைக் காணவும் கேட்கவும் மிகவும் இன்பமாயிருக்கும்.

சிலருக்கு, இரவில் சிறிது தூரம் உலவப் போவது மிகவும் பிடித்திருக்கும். அன்றைய நிகழ்ச்சிகளை மனத் தில் அசை போட்டவாறே நடந்து செல்லலாம்.

இந்தக் கழகத்தில் பயிலவரும் மாணவர்களில் பெரும்பாலோர் அப்போதுதான் முதல் தடவையாக ஹாலந்துக்கு வருபவர்களா யிருப்பார்கள். ஏன் ஐரோப் பாவைக் காண்பதே அதுதான் முதல் தடவை யாயிருக் கும். டச்சு வரலாறு, பண்பாடு, கலைக்கழகங்கள், மக்க ளின் வாழ்க்கைமுறை முதலியவற்றை, அங்கே தங்கி யிருக்கும் போது அவர்கள் கற்கலாம். ஒவ்வோரண்டி லும், ஹாலந்திலும், அதன் சுற்றுப்புற நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு, சமூக இயல் கழகம் ஏற்பாடு செய்கிறது. பல நாடுகளையும் ஒப்பிட்டுக் காண்பதற்கு, இது வகை செய்கிறது.

இந்தக் கழகம் ஹேக் நகரில் அமைந்துள்ளது. ஹேக் சர்வதேச நகரமாய் விளங்கும் பெருமை பெற்றது. பல்வேறு சர்வதேச ஸ்தாபனங்களின் தலைமை நிலைய மாக அது விளங்குகிறது. அழகு, அமைதி, ஆர்வமூட்டக் கூடிய தன்மையாகிய அனைத்தும் ஹேக் நகருக்குண்டு. நகரங்களுக்குரிய நன்மைகளும் வசதிகளும் ஹேக்கில் உண்டு; ஆனால் தீமைகள் இல்லை.

பயிர் இன்ஷ்யூரன்ஸ்

அமெரிக்க அரசாங்கத்துப் பயிர் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஒரு ஏகராவுக்கு வழங்கும் இன்ஷ்யூரன்ஸ் தொகை ஒரே மாதிரியானதல்ல. பயிருக்குப் பயிர் அது வேறுபட்டதாக இருப்பதுடன் இடத்திற்கு இடமும் மாறுபட்டதாகும். எனவே இன்ஷ்யூரன்ஸ் தொகையைப் பற்றியும் அது நிர்ணயிக்கப்படும் முறையைப்பற்றியும் பொதுவாகத்தான் சொல்ல முடியும்.

மற்ற இன்ஷ்யூரன்ஸ்களைப் போல், ஒரு விவசாயி தமக்கு இஷ்டப்பட்ட எந்தத் தொகைக்கும் பயிர் இன்ஷ்யூரன்ஸ் பெற்றுக் கொள்ள முடியாது. ஒரு ஏகராவுக்குப் பலவிதத் தொகைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் அளிப்பது நடவாத காரியம். இதனல், ஒரு ஏகராவுக்கு, குறிப்பிட்ட ஒரே தொகைக்குத்தான் விவசாயி இன்ஷ்யூர் செய்து கொள்ள முடியும். இந்தத் தொகையை நிர்ணயம் செய்வதிலும் கூட மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது.

ஒரு ஏகராவுக்கு இவ்வளவு என்று இன்ஷ்யூரன்ஸ் தொகையை நிர்ணயம் செய்வதிலும் முக்கிய விஷயம் ஒன்று உண்டு. இன்ஷ்யூரன்ஸ் என்பது உத்தரவாதமாகும்.

பிரிமியத் தொகை

எடுத்துக் காட்டாக, ஒரு ஏகராவுக்கு 15 கலம் தானிய விளைச்சலுக்கு இன்ஷ்யூர் செய்வதாக வைத்துக் கொள்வோம். 15 வது கலம் தானியம் விளைவது அரிதாக

இருக்கும். அதனல் இன்ஷ்யூரன்ஸைப் பொறுத்தமட்டில் 15வது கலத்துக்கு இன்ஷ்யூரன்ஸ் அதிகச் செலவு உள்ளது. இதைவிட செலவு குறைவானது 14வது கலம். ஏனெனில் அது உற்பத்தியாகும் சாத்தியக்கூறு 15வது கலத்தைவிட அதிகம். 14வது கலத்தைவிட 13வது கலத்தின் சாத்தியக்கூறு இன்னும் அதிகம் இப்படிக்கணக்கிடுகையில் 10 கலம் தானியத்திற்கு இன்ஷ்யூர் செய்வதற் வேண்டிய பிரிமியம் 15 கலம் இன்ஷ்யூர் செய்வதற்காகும் பிரீமியத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறைவாக, அநேகமாகப் பாதியோ அல்லது அதற்குக் குறைவாகவோ தான் இருக்கும். இதனல் கூடுதல் பிரீமியம் கொண்ட பெரும் தொகை இன்ஷ்யூரன்ஸ் அதிக பாதுகாப்பு தருவதால் கவர்ச்சியாகவும், குறைந்த இன்ஷ்யூரன்ஸ் மலிவான பிரிமியத்திஞல் கவர்ச்சியாகவும் இருக்கின்றன.

இன்ஷ்யூரன்ஸின் அதிக பட்ச அளவில்தான் அதிகமாக இருப்பதால், கார்ப்பொரேஷன் இந்த அளவை நிர்ணயிப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது,

இன்ஷ்யூரன்ஸ் செய்யக்கூடிய தொகை அந்தந்த இடத்தைப் பொறுத்து நிர்ணயிக்க வேண்டியதாகும்.

இன்ஷ்யூரன்ஸ் தொகைக்கு இரண்டு உச்சப்பட்ச அளவுகளை பெடரல் பயிர் இன்ஷ்யூரன்ஸ் சட்டம் நிர்ணயித்திருக்கிறது. ஒரு பிரதேசத்தில் ஒரு ஏகரா பயிர் வைக்க, செய்யப்பட்டுள்ள முதலீட்டிற்கு மேற்போகக் கூடாது என்பது ஓர் அளவு; குறிப்பிட்ட பல ஆண்டுகளின் சராசரி விளைச்சலுக்கு முக்கால் பங்குக்கு மேற் போகக்கூடாது என்பது மற்ற அளவு. இவ்விரண்டு அளவுகளுக்கிடையில்தான் இன்ஷ்யூரன்ஸ் தொகையும் பிரிமியத் தொகையும் நிர்ணயிக்கப்பெறுகின்றன.

அமெரிக்க அரசாங்க வேளாண்மை இலாகா, ஒவ்வொரு தாலூகாவுக்கும் தரும் சராசரி விளைச்சல் பற்றிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் பல்வேறு தாலூகாவுக்குரிய இன்ஷ்யூரன்ஸ் தொகையை தலைமை அலுவலகத்தில் இன்ஷ்யூரன்ஸ் கணக்கு நிபுணர்கள் கணக்கிடுகின்றனர். விவசாயிகள் எவ்வளவு பிரிமியம் தரச் சம்மதிக்கின்றனர் என்பதும் இன்ஷ்யூரன்ஸ் தொகையை நிர்ணயிப்பதற்கு முக்கிய விஷயமாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தாலூகாக்களுக்கு பிரிமிய விகிதங்கள் கணக்கிடும் வழக்கமும் உண்டு.

ஒரு தாலூகாவுக்குரிய தொகையை தலைமை அலுவலகம் நிர்ணயித்ததும் அது அந்த தாலூகா இன்ஷ்யூரன்ஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கும். அவர் உள்ளூர் மக்களின் உதவியுடன், தாலூகாவின் பல்வேறு பகுதிகளுக்குத் தக்கவாறு இன்ஷ்யூரன்ஸ் தொகைகளை மாற்றி அமைக்கிறார். இதற்கு அடிப்படையாக இருப்பது நிலத்தின் உற்பத்தித் திறனாகும்.

தாலூகாவைப் பல பிராந்தியங்களாகப் பிரிப்பதற்கு விளைச்சல் பற்றிய புள்ளி விவரங்கள், மண் தரம் பற்றிய படங்கள், இன்னும் பிற தகவல்கள் உதவி புரிகின்றன. சில பகுதிகளுக்கு அதிக இன்ஷ்யூரன்ஸ் தொகையும் சிலவற்றிற்கு குறைந்த தொகையும் நிர்ணயிக்கப்பெறலாம். ஆனால் தாலூகாவின் சராசரி இன்ஷ்யூரன்ஸ் தொகை தலைமை அலுவலக இன்ஷ்யூரன்ஸ் கணக்கதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பெற்ற தொகைக்கு மேற் போகக்கூடாது.

சில மாறுதல்கள்

புகையிலை இன்ஷ்யூரன்ஸ் இருக்கும் சில தாலூகாக்களில், தாலூகாவுக்குள் ஒருபிரதேசத்திற்கு இன்ஷ்யூ

ரன்ஸ் தொகையை நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக, அந்தத் தாலூகாவில் புகையிலை உற்பத்தி செய்யும் நிலச் சொந்தக்காரர்கள், பணம் கொடுத்து நிலம் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் நபர்கள் ஆகியோரின் ஜாபிதா ஒன்று தயாரிக்கப்பெறுகிறது, ஒவ்வொருவருக்கும் இன்ஷ்யூரன்ஸ் தொகை, அவரவருடைய உற்பத்தி அளவு பற்றிய கணக்குகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பெறுகிறது. சுமார் பன்னிரண்டு இன்ஷ்யூரன்ஸ் தொகைகள், மிகக் குறைந்த பட்சத்திலிருந்து அதிகப் பட்சம் வரை நிர்ணயிக்கப்பெற்று, ஜாபிதாவில் காணப்படும் ஒவ்வொருவருக்கும், அவரவர்களுடைய பழைய உற்பத்தி அளவுகளின் அடிப்படையில், ஒரு தொகை நிர்ணயிக்கப்பெறுகிறது. நிலச் சொந்தக்காரருக்குத் தரப்படும் இன்ஷ்யூரன்ஸ் தொகைதான் நிலத்தைக் குத்தகைக்கு எடுப்பவருக்கும்.

பருத்தி இன்ஷ்யூரன்ஸ் இருக்கும் தாலூகாக்களில் சில பண்ணைகளுக்கு ஒவ்வொரு பண்ணைக்கும் தனித் தனியாக இன்ஷ்யூரன்ஸ் தொகைகளை நிர்ணயிக்கும் முறையொன்றைப் பரீட்சை செய்து வருகின்றனர்.

இரண்டு தொகைகள்

ஒரு பிரதேசத்திற்கே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இன்ஷ்யூரன்ஸ் தொகைகள் நிர்ணயிக்கப் பெறலாம். கையாளப்படும் பண்ணை முறைகளின் அடிப் படையில் இந்தத் தொகைகள் நிர்ணயிக்கப்பெறுகின்றன. நீர்ப்பாசனம் உள்ள நிலத்திற்கு நீர்ப்பாசனம் இல்லாத நிலத்தைவிட அதிக இன்ஷ்யூரன்ஸ் தொகை கிடைக்கும். கோடை காலத்தில் தரிசாக விடப்படும் நிலத்திற்கு, தரிசாக விடப்படாத நிலத்தைவிட அதிக இன்ஷ்யூரன்ஸ் கிட்டும்.

தரகு இல்லாத இன்ஷ்யூரன்ஸ்

அமெரிக்க அரசாங்க பெடரல் பயிர் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனில் இன்ஷ்யூர் செய்து கொள்ளும் ஒவ்வொரு விவசாயிக்கும் கார்ப்பொரேஷனுடன் நேரடியான இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தம் ஏற்படுகிறது. சில நாடுகளில் உள்ளூர்ச் சங்கம் ஒன்று விவசாயியை இன்ஷ்யூர் செய்கிறது. பிறகு சங்கம் ஒரு தேசிய ஸ்தாபனத்துடன் இன்ஷ்யூர் செய்து கொள்கிறது. அமெரிக்காவில் அப்படியல்ல. விவசாயி தேசிய கார்ப்பொரேஷனுடனேயே இன்ஷ்யூர் செய்து கொள்கிறார். பெடரல் பயிர் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் தாலூகா, ராஜ்ய அலுவலகங்கள் எல்லாம் நிர்வாக சௌகரியத்திற்காக ஏற்பட்டுள்ளனவே தவிர, அவை இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளோ அல்லது சங்கங்களோ அல்ல.

விவசாயி இதனால் சமமான அந்தஸ்தில் கார்பொரேஷனுடன் இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் சில உரிமைகள் திட்டவட்டமாக உள்ளன. தேவை ஏற்பட்டால் இந்த உரிமைகளை அமுல் செய்ய அவர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம்.

ஒரே பாலிசி

இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தில், இன்ஷ்யூரன்சுக்கான மனு, இன்ஷ்யூரன்ஸ் பாலிசி, தாலூகாவுக்குரிய இன்ஷ்யூரன்ஸ் கணக்குப் பட்டியல், சம்பந்தப்பட்ட படங்கள் முதலியன சேர்க்கப்பெற்றிருக்கும். மனு நமூனவில், பிரிமியம் ஆண்டுதோறும் செலுத்துவதாக புரோ நோட்டும் இருக்கும். ஒரு விவசாயிக்கு இரண்டு அல்லது மூன்று பயிர்களுக்கு, உதாரணமாகக் கோதுமை, சோளம்

சோயாமொச்சை ஆகிய பயிர்களுக்கு, இன்ஷ்யூரஸ் இருந்தும் அவருக்கு ஒரு பாலிசி தான் வழங்கப்பட்டாலும் அதில் ஒவ்வொரு பயிரும் தனித்தனியாக பதிவு செய்யப் பெற்றிருக்கும் இதற்குப் பெயர் 'ஸ்டாண்டர்ட் பாலிசி'. சமீப காலம் வரை கார்ப்பொரேஷன் ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனிப் பாலிசிகளை வழங்கிவந்தது. 'ஸ்டாண்டர் பாலிசி' அண்மையில் ஏற்பட்ட ஓர் அபிவிருத்தியாகும்.

குறிப்பிட்ட ஒரு தாலூகாவில் இன்ஷ்யூரன்ஸுக்குத் தகுதியுள்ள பயிர்களைக் கார்ப்பொரேஷன் தான் முடிவு செய்கிறது. விவசாயி தமக்கு இன்ஷயூரன்ஸ் தேவையான பயிர்களை இந்த ஜாபிதாவிலிருந்து தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். ஆனால் இதிலும் சில விலக்குகள் உள்ளன. சில பயிர்களில் இன்ஷ்யூரன்ஸ் வேண்டுமானல் மற்றப் பயிர்களுக்குக் கட்டாயமாக இன்ஷ்யூர் செய்து கொள்ளவேண்டும்.

ஸ்டாண்டர்ட் பாலிசியில் ஒன்றிரண்டு பயிர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் இருக்கலாம். தேவை ஏற்பட்டால் சில ஆண்டுகள் கழித்தும்கூட வேறுபயிரையும் சேர்த்துக் கொள்ளலாம். எந்த ஆண்டின் முடிவிலும் எந்தப் பயிருக்கோ அல்லது எல்லாப் பயிர்களுக்குமோ அவர் இன்ஷ்யூரன்ஸை ரத்துச் செய்து கொள்ளலாம். ஆனல் பாலிசியில் அந்தந்தப் பயிருக்குரிய ரத்துத் தேதிக்குள் அவர் ரத்துச்செய்ய வேண்டும். ரத்துத் தேதி பொதுவாக, முடிவு தேதிக்குப் பல மாதங்களுக்கு முன்னதாகத் தான் இருக்கும், ரத்துச்செய்த பிறகு மனம்மாறும் பட்சத்தில், ரத்துச்செய்து பதினைந்து தினங்களுக்குள் இன்ஷ்யூரன்ஸை உயிர்ப்பித்துக் கொள்ளலாம்.

மாற்றம் பற்றிய அறிவிப்பு

அடுத்த ஆண்டிற்கு இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்திலோ அல்லது இன்ஷ்யூரன்ஸ் ஷரத்துக்களிலோ ஏதா

வது மாற்றங்கள் இருக்குமேயாகில், ரத்துத்தேதிக்குக் குறைந்தது பதினைந்து தினங்களுக்குமுன் கார்ப்பொஷன் அறிவிப்புச் செய்ய வேண்டும். முந்திய ஆண்டிற்குரிய பிரிமியம் செலுத்தப்படாமல் நின்று போயிருக்குமே யாகில், இன்ஷ்யூரன்ஸ் குறிப்பிட்ட தேதியில் தானகவே ரத்தாகி விடுகிறது.

ஒவ்வோர் ஆண்டிலும் விவசாயிகள் ரத்துச்செய்வதும் கார்ப்பொரேஷன் ரத்துச் செய்வதும் இருந்து தான் வருகின்றன. மூன்று காரணங்களின் பேரில் கார்ப்பொரேஷன் ரத்துச்செய்கிறது: (1) இன்ஷ்யூர் செய்துகொண்டவர் வழக்கமாகப் பயிர் செய்பவரல்ல; அவ்வப்பொழுதுதான் பயிர் செய்கிருர். (2) அடிக்கடி ஏற்படும் நஷ்டத்தால் இன்ஷ்யூரன்ஸ் ஆபத்து அதிகமாக இருக்கிறது. (3) பிரிமியம் செலுத்தத் தவறியது. மூன்ருவது காரணம் ரத்தாகாது. ஒப்பந்தம் தாஞகவே முறிந்து போகிறது.

தொடர்ச்சியான இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தைப் பயன்படுத்திக் கொள்வது, ஒவ்வோர் ஆண்டிலும் எல்லாவற்றையும் திரும்ப இன்ஷ்யூரன்ஸ் செய்வதை அவசியமில்லாததாக்குகிறது. சமீப ஆண்டுகளில் இன்ஷ்யூரஸில் முக்கால் பங்கு அமுலில் இருக்கிறதாகக் கூறப்படுகிறது. கார்ப்பொரேஷனின் கருத்துப்படி இது மிகவும் சிக்கனமான முறையாகும். தொழிலின் அளவிலும் ஒரு உறுதி நிலையை உண்டு பண்ணுகிறது. விவசாயியைப் பொறுத்த மட்டில், ஒவ்வொரு ஆண்டிலும் இன்ஷ்யூரன்ஸுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டியதில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் இன்ஷ்யூரன்ஸ் வைத்துக் கொள்ளும் பழக்கத்திற்கு இது ஊக்கமூட்டுகிறது. நஷ்டம் ஏற்பட்டால் இது ஒன்றுதான் பாதுகாப்புத் தருவது.

மேற்கண்ட அனுகூலங்கள் தொடர்ச்சியான இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தம் மூலம் கிடைக்கப்பெற்ருலும், விவசாயியும் சரி கார்ப்பொரேஷனும்சரி, ஒரு சமயத்தில் ஓர் ஆண்டுக்குத்தான் கட்டுப்பட்டவர்களாகின்றனர்.

இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தின் மிக முக்கிய தேவைகளில் ஒன்று இன்ஷ்யூர் செய்து கொள்ளும் விவசாயி நடுகையானதும், நிலப்பரப்பு, இருக்கும் இடம், அவருடைய பங்கு முதலிய விவரங்களை உடனே அறிவித்து விடுவதாகும். இந்த அறிவிப்பின் பேரில்தான் பிரிமியம், இன்ஷ்யூர் தொகை முதலியன நிர்ணயிக்கப் பெறுகின்றன. இந்த அறிவிப்பைத் தாமதப்படுத்தினலோ அல்லது அதில் ஏதாவது தவறு செய்தாலோ பல பிரச்னைகள் ஏற்பட்டு விடும்.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில்வாழ் வே!

—தனிப்பாடல்

எல்லாம் தெய்வச் செயல்

சக்கரம் போல் எல்லாம் விடாமல் சுழன்று வருகின்றன. மேலே சென்றது கீழாகும்; கீழே போனது மேலாகும். ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் எண்ணத்தின்படியே நடக்கும். அதாவது, அதன் மூல நியமனத்தின் பயனாக ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரும்.

உலக நிகழ்ச்சிகளில் தவறாத தொடர்பு இருக்கிறது. எதுவாக இருந்தாலும், தெய்வ நியமனமே; அது நலனேயாகும். ஒருவேளை நீ கடவுள் பொய், எல்லாம் தற்செயல் என்றாலும் நீயும் நியாயமற்று இருக்க வேண்டிய அவசியம் இல்லை; சாந்தம் இழந்து கவலைப்பட வேண்டியதில்லை.

சீக்கிரத்தில் சகலமும் மண்ணாய் நிலத்தில் சேரும். பிறகு அதுவும் மாறி வேறு உலகமாகவே ஆகும். பிறகு அதுவும் மாறும். இப்படி நடந்து கொண்டே போகும். இவ்வாறு உலகமே மாறி மாறிப் போவதை நினைத்தால். நிலையில்லாத விஷயங்களில் பற்றுத் தீர்ந்து விடும்.

—மார்கஸ் ஔரேலியஸ்

காந்தி வாக்கு

பொன்னைவிடச் சத்தியத்தைப் போற்று. செல்வத்தையும் சேனையையும்விட அஞ்சாமையைப் போற்று. உன்னைக் காட்டிலும் மற்றவனிடம் அன்பாக இரு. இறைவனுடைய இன்ப நாட்டையும், அதன் நீதியையும் தளராமல் தேடிச் செல்.

யாதும் ஊரே

இவ்வுலகம் எனது நாடு; மனித சமூகம் எனது சுற்றம்; நல்லது செய்வதே எனது மதம்.

— தாமஸ் பெய்ன்

பழமொழிகள்

பழமொழிகளைப் பாமர மக்களின் இலக்கியங்கள் என்று கூறலாம்.

—கோஸென்ஸ்

கஷ்டமான நேரம்

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கஷ்டமான நேரம் எது? உழைக்காமல் எப்படிப் பணம் சேர்க்கலாம் என்று அவன் உட்கார்ந்து திட்டம் போடும்பொழுதுதான்.

—கிரெல்லி

வரி

நகரங்களில் உள்ள நிலங்களில் வளர்வது வரி ஒன்றுதான்.

—வார்னர்

மனிதனும் யந்திரமும்

ஒரு யந்திரம், ஐம்பது சாதாரண மனிதர்கள் செய்யும் வேலையைச் செய்ய முடியும். ஆனல் ஒரு கெட்டிக்காரனின் வேலையை ஒரு யந்திரமும் செய்ய முடியாது.

—ரோட்ஸ்

வசன காவியம்

வசன காவியம் எழுதுவது, வலையில்லாமல் டென்னிஸ் பந்தாடுவதை ஒக்கும்.

—ராபர்ட் பிரோஸ்ட்

சமத்துவம்

சமத்துவம் என்பது, உயிருள்ள மக்களிடையே இல்லாத ஒன்று.

—கம்மிங்ஸ்

என் லட்சியம்

மனிதன் சுயநலத்தையே பெரிதாகக் கருதி மற்றவர்கள் நன்மையைக் குறித்துக் கவலை கொள்ளாதிருக்கும் வரையில் அவன் விலங்கினும் கேடானவன்.

தன் குடும்ப நலத்துக்காக அவன் உழைக்கத் தொடங்கும்பொழுது, விலங்கினத்தைவிடச் சிறிது உயர்வடைகிறான்.

அவன் தன் சமூகம் அல்லது தேசத்தைத் தன் குடும்பமாகக் கருதத் தொடங்கும்பொழுது இன்னும் உயர்வடைகிறான்.

காட்டுமிராண்டிகள் உள்பட உலகிலுள்ள அனைவரும் ஒரே குடும்பத்தார் என்று கருதத் தொடங்கியதும் சீரிய மனிதன் என்ற நிலையை எய்துகிறான்.

ஒவ்வொருவரும் இந்நிலையை எய்த வேண்டும் என்பதுதான் என் லட்சியம்.

—காந்தியடிகள்

நம் கடமை

இந்தியாவில் அநேக ஜாதிகள், மதங்கள், மொழிகள் என எண்ணற்ற வேற்றுமைகள் இருப்பினும் அவற்றை

நாம் ஒப்புக் கொள்ளக் கூடாது. அனைவருடனும் நாம் உடன் பிறந்தவர்களைப் போல் பழக வேண்டும். முக்கியமாக மாணவர்களிடமும், வாலிபர்களிடமும் வற்புறுத்திக் கூறுகிறேன். இந்தியாவின் ஆத்மீக போதம் பரவ இது தான் சிறந்த வழி.

—விநோபா பாவே

உண்மை வாழ்க்கை

இந்த மானிட உலகம் மிகத் துச்சமானதாகும். ஒருவனுடைய ஜீவன் அவனுடைய செல்வப் பெருக்கத்தில் இல்லை. தன் வாழ்நாளை தன் நலத்துக்கும் சந்தோஷத்துக்குமே என்று செலவழிப்பவன், உண்மை வாழ்க்கையை இழப்பான். பிறருடைய வாழ்க்கையில், சிறிது துக்க நிவாரணமும், சிறிது சந்தோஷமும் ஏற்படுத்துகிறவன் தன் நித்திய ஜீவனை அடைவான். ஒருவன் உலகம் முழுதும் பெற்றாலும், தன் நித்திய ஜீவனை இழந்தால் அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்?

—விவிலிய நூல்

புத்தகங்கள்

புத்தகங்கள் இல்லாத வீடு, ஜன்னல்கள் இல்லாத அறையைப் போன்றது.

—ஹோரெஸ் மான்

நேரம்

நேற்று, சூர்யோதயத்திலிருந்து சூர்ய அஸ்தமனத்துக்குள்ள, தங்க மயமான இரண்டு மணி நேரத்தை—அவை ஒவ்வொன்றும் அறுபது வைரமுள்ள நிமிஷங்கள் பதிக்கப் பெற்றன—இழந்து விட்டேன், அதனைக் கண்டு பிடிப்பதற்கு வெகுமதி கொடுத்தும் பயனில்லை; ஏனெனில் அவை சென்று விட்டன.

—ஹோரெஸ் மான்

செயலும் புகழும்

நீங்கள் ஒரு காரியத்தைச் செய்யலாம்; அல்லது செய்ததாகப் புகழ் பெறலாம். ஆனால் இரண்டும் ஒருங்கே உங்களுக்குக் கிடைக்காது.

—லாரென்ஸ் லோவல்

அநாதை

ஒருவன் தனது தாய் தந்தையர்களைக் கொன்று விட்டான். அதற்காக நீதிபதி அவனைத் தூக்கிலிட உத்தர விட்டபொழுது, அவன், தான் பெற்றோர்களில்லாத ஓர் அநாதை என்றும், அதனால் தன் மீது கருணை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டானாம்.

—ஆபிரஹாம் லிங்கன்

காஞ்சி காமகோடி பீடாதிபதி நல்லுரை

புராணம் என்பது வேதத்தின் பூதக்கண்ணாடி. வேதத்தில் உள்ளவை உத்தரவுகளாக இருக்கும். 'உண்மை பேசு' என்று வேதம் சொல்லுகிறது. அது நமக்கு நினைவுக்கு வராது. பல அத்தியாயங்களைக் கொண்ட அரிச்சந்திர புராணத்தை வாசித்தால் தான் அது நினைவுக்கு வருகிறது. 'தந்தையைத் தெய்வமாகக் கொள்' என்று வேதவாக்கியம் கூறுகிறது. ராமாயணம் வாசித்தால்தான் அது நன்றாகப் புரியும். இப்படி வேதத்தைப் பெரிதாகப் பண்ணிக் காண்பிப்பதுதான் புராணம்.

ஆயுள் ஏன் அதிகமாக இருக்கவேண்டும்? நாஸ்திகர்களைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் எப்பொழுது போனாலும் அவர்களுக்குக் கெடுதல் ஒன்றுமில்லை. ஆஸ்திகர்களுக்குத்தான் நீண்ட ஆயுள் வேண்டும். எவ்வளவோ பாவம் செய்து, இப்பிறவியை அடைந்து கஷ்டப் படுகிறோம். இந்தப் பாவங்களைப் போக்கப் புண்ணியம்-

தீர்க்கமான தர்மங்களைச் செய்யவேண்டும். அந்தத் தர்மங்களை இந்த உடல் இருக்கும்பொழுது செய்யவேண்டும். ஆகையால் உடலை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். அதனால்தான் ரிஷிகள் அதற்கு உபயோகமாகும்படி ஆயுர்வேத சாஸ்திரங்களைச் செய்திருக்கிறார்கள். ஆயுர்வேதத்தில் நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யாதே என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாஸ்திகன் பாவங்களை அதிகமாகச் செய்து கொண்டேயிருக்கிறான். அவனுக்கு ஆயுள் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கேற்ற பாவத்தையும் அவன் சம்பாதித்துக் கொள்கிறான். எவ்வளவு சீக்கிரம் அவன் இறந்து போகிறானோ, அவ்வளவுக்கேற்ற பாவத்திலிருந்தும் அவன் தப்பித்துக்கொள்கிறான். அதனால் அவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டியதில்லை; வைத்தியமும் வேண்டியதில்லை.

இந்தப் பிறவி போனால் எதுவருமோ நமக்குத் தெரியாது. இந்தப் பிறவியிலேயே முயன்று சித்த சுத்தி செய்து ஜீவன் முக்தியை அடையவேண்டும்.

உயிரும் உடலும் பிரிவதற்குமுன் காமக்குரோதம் இல்லையா என்று பார்த்துக் கொண்டு, அப்புறம் இந்த உடலை விடவேண்டும். ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால் மாடாகப் பிறந்தால் என்ன பண்ணுவது? ஆகையால் உடலை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். ஆயுர்வேதம் அதற்கு அவசியம், உடம்பு வலித்துக் கொண்டே இருந்தால், ஜபம் செய்ய முடியுமா? யோகம் செய்ய முடியுமா? நிஷ்டை எங்கே? ஞானம் எங்கே?

மருந்தைக் காட்டிலும் பத்தியம் முக்கியமானது. வியாதி வந்த பின்பு மருந்து சாப்பிட்டுப் போக்கிக் கொள்ளுவதைக் காட்டிலும் வராமலே தடுத்துக் கொள்ள

வேண்டும். அதற்கு உபவாசம் ஒரு பத்தியம். பதினைந்து தினங்களுக்கு ஒரு தடவை உபவாசம் இருக்கவேண்டும்

பக்தி வந்தால் குயுக்தி போய்விடும். நம்மையறியா. மல் ஒருவித ஆனந்தம் பக்தியினுல் வருகிறது.

குழந்தை அழுவதைவிட ஆயிர மடங்கு, கன்றுக் குட்டி அம்மா என்று கத்துவதில் ஆவல் தோன்றுகிறது, கன்றுக்குட்டி அம்மா என்று கத்துவதைப் பார்த்துத் தான் மனிதர்கள் அம்மா என்றபெயரை வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நாம் எல்லோரைக் காட்டிலும் புத்திசாலி, எல்லோரையும்விட அழகுடையோம் என்ற எண்ண மிருக்கிறது. புத்திசாலி என்ற எண்ணத்தினுல் எல்லோ ரையும் ஏமாற்றிவிடலாம் என்ற நினைவு உண்டாகிறது. எல்லாத் தப்பையும் ஒருவருக்கும் தெரியாமல் பண்ணி விடலாம் என்று நினைக்கிருேம். இன்னும் புத்திசாலி ஆக வேண்டும் என்ற ஆசையில்லை. பணக்காரனுக வேண்டும் என்ற தீர்மானம் மட்டும் இருக்கிறது.

பயமே இல்லாமல் இருசக, பிறவியே இல்லாமல் இருக்க வேண்டும்.

உண்மை

உண்மை எங்கும் தெரிகிறது. அழகு எங்கும் தாண் டவமாடுகிறது. எந்தப் பொருளும் நமக்கு இன்பந் தரத் தயாராக இருக்கிறது. உயிர்ப் பொருளுக்கும், உயிரற்ற பண்டத்துக்கும் உள்ள வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண, உண்மை நம்மை இழுத்துச் செல்கிறது.

—தாகுர்

முதல் வேலை

நாம், ஒவ்வொரு நாள் காலையிலும், முதல்வேலையாக அன்றையதினம் பின் வருமாறு நடப்பதாக உறுதி கொள்வோமாக,

உலகில் ஒருவர்க்கும் அஞ்சேன்
கடவுள் ஒருவர்க்கே அஞ்சுவேன்
யாரிடமும் துவேஷம் கொள்ள மாட்டேன்
எத்தகைய அநீதிக்கும் உட்படேன்
பொய்மையை உண்மையால் வெல்வேன்
பொய்மையை எதிர்ப்பதால் உண்டாகும்
துயரங்கள் அனைத்தையும் சகிப்பேன்.

— காந்தியடிகள்

பெரிது

தந்தையாவது பெரிதல்ல; தந்தையாக அமைவதே பெரிது.

—ஜெர்மன் பழமொழி

இந்தியக் கலாசாரம்

சமுத்திரத்தின் ஆழம் மிக மிக அதிகம். அதில் ஆயிரம் ஆயிரம் ஆறுகள் வந்து கலந்த போதிலும், அது தன் சிறப்பை, தன் எல்லையை, தன் பெருமையைத் துறப்பதில்லை. இந்தியக் கலாசாரமும் கடலைப்போன்றதே.

—வினோபா பாவே

போற்றுவோம்

நம் அனைவரையும் என்றும் வற்றாத அன்பால் ஆட்சி புரியும், தெய்வீக அன்னையைப் போற்றுவோமாக.

வலிமை

வலிமை உடல் பலத்தால் ஏற்படுவதல்ல. மன உறுதியிலிருந்தே வலிமை உண்டாகிறது. அஹிம்சை

என்றால், கொடுமையைச் செய்பவர்களின் முன் பணிந்து நிற்கும் பலவீனம் அன்று. ஆனால், கொடுமையாளரை, ஆத்ம பூர்வமாக எதிர்த்து நிற்பதுதான் அஹிம்சையாகும்.

—காந்தியடிகள்

சீதாதேவியே லட்சியம்

இந்திய மாதர்கள் சீதாதேவியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வளர வேண்டும். சீதா தேவியே ஒப்பற்றவள். அவளே இந்திய மாதரின் லட்சியமாவாள். இந்தியாவில் தோன்றியிருக்கும் உயர்ந்த பெண்மணிகள் அனைவரும் அவள் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர்களே. அவள் தோன்றி இப்பொழுது ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு மேலாகிறது. எனினும் அவளை வழிபடாத இந்திய மகனோ, மகளோ கிடையாது. சீதாதேவி, கற்பின் அவதாரம்; பொறுமைக் கடலாயிருந்து சகல துக்கங்களையும் முணுமுணுப்பு எதுவுமின்றிப் பொறுத்தவள். அவள் எப்பொழுதும் நம் தேசீய லட்சிய மாயிருப்பாள். அவளுடைய உணர்ச்சியும், லட்சியமும் நம் இரத்தத்துடன் இரத்தமாய்க் கலந்திருக்கின்றன. தற்காலத்தில் நம் பெண்கள் சீதாதேவி காட்டிய வழியினின்று பிறழ முயன்றால், அம்முயற்சி வீணாவது நிச்சயம்.

—விவேகாநந்தர்

ஆன்மா

ஆன்மா சூரியனைப் போல் என்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது. அஞ்ஞானம் என்னும் திரை அதனை மறைத்திருக்கிறது.

—விவேகாநந்தர்

எதுவேண்டும்?

“பணத்தைச் சம்பாதி, அதில் எங்களுக்கும் கொஞ்சம் கிடைக்கட்டும்” என்று உனது நண்பர்கள் சொல்லு

கிறார்கள். பணத்தைச் சம்பாதிப்பதுடன், நான் அடக்கமும், விசுவாசமும், பெருந்தன்மையும் உள்ளவனுக இருக்க ஒரு வழி உண்டெனில், அந்த வழியை எனக்குக் காட்டு. நான் அவ்வழியில் சென்று பணத்தைச் சம்பாதிப்பேன். அவ்வாறின்றி 'நன்மைகள்' என்று கருதப்பெறுவதும், எனக்குச் சொந்தமுமான விஷயங்களை இழந்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக நன்மை பயவாத விஷயங்களைத் தேடும்படி, நீ எனக்குப் போதனை செய்வது சிறிதும் தகாது என உனக்குத் தோன்றவில்லையா?

உனக்குப் பணம் வேண்டுமா? அல்லது விசுவாசமும் அடக்கமும் உள்ள ஒரு நண்பன் வேண்டுமா? இவ்விரண்டில் உனக்கு எது வேண்டும்?

—எபிக்டிடஸ்

ஞானம்

இப்போது செய்வதையே செய்; இப்போது துயருறுகிறபடியே துயரப்படு; இதையெல்லாம் ஞானநிலையினின்று செய்தற்கு, உனது நெஞ்சைத் தவிர வேறொன்றையும் மாற்றவேண்டாம். இறைவனது ஆணையால், நமக்கு நேர்வதை நாம் ஏற்று, அவ்வாறே நடக்கட்டும் என்று நம் சங்கற்பத்தை இசைவிப்பதில் தான் ஞானம் அடங்கியுள்ளது.

—ஒரு மேற்றிசை ஞானியார்

நில, நீர்வளப் பாதுகாப்பு

அமெரிக்க விவசாய இலாகாவும் நில மானியக் கல்லூரிகளும் விவசாயிகளுக்குப் பலவகை உதவிகள் செய்கின்றன. விவசாயிகள் தம் கையையே நம்பி முன்னேற்றம் அடைவதற்கு அவை துணை செய்கின்றன.

ராஜ்ய விவசாயப் பரிசோதனை நிலையங்களும், விவசாய ஆராய்ச்சிப் பிரிவும் தெரிவிக்கும் செய்திகளை ராஜ்யங்களின் கிராம நல அதிகாரிகள் (கவுண்டி ஏஜெண்டுகள்) விவசாயிகளுக்கு அறிவிக்கிறார்கள். வேளாண்மை பற்றிய புதிய விவரங்களை நுக்கியமாகத் தெரிவிப்பவர்கள் கிராம நல அதிகாரிகளே.

மண்வளப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த தொழில் நுட்ப சாலிகள் மண்மளத்தையும் நீர்வளத்தையும் பாதுகாக்கத் தொழில் நுட்ப உதவி அளிக்கிறார்கள்.

செலவில் ஒரு பகுதி கிடைப்பதற்கும் கடன் பெறுவதற்கும் விவசாய இலாகா வசதிகள் செய்து கொர்டுக்கிறது. மண்வளப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கிறது.

நிலத்தைப் பயன்படுத்தும் முறைகள் பற்றிய விஞ்ஞானத் தகவல்களை விளக்கிக் கூறினாலன்றி அறிந்து கொள்ள முடியாது. அவை மிக நுணுக்கமானவை. அவற்றை அறிந்து கொள்வதற்குத் தொழில் நுட்ப அறிவு வேண்டும். எனவே, விவசாய இலாகா வேளாண்மைத்

தகவல்களை அறிவிக்கும் திட்டம் ஒன்று நடத்துகிறது. நிலமானியக் கல்லூரிகளும் வேளாண்மைக் கல்வி ஊட்டுகின்றன. வேளாண்மையின் பல்வேறு துறைகள் பற்றிய நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்கிறார்கள்.

விவசாயக் கல்வித் திட்டத்தில் விவசாயிகள் கல்லூரிகளின் பிரதிநிதிகளோடும், விவசாய இலாகாவின் பிரதிநிதிகளோடும் ஒத்துழைக்கிறார்கள். நில உபயோகப் பிரச்னைகள் எவையெவை பற்றி ஆராய வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கு விவசாயிகள் துணை செய்கிறார்கள்.

விவசாய முறைகளைப் பற்றியும், கால் நடை வளர்ப்பு முறைகளைப் பற்றியும் விவசாயிகள் தாங்கள் அறிய வேண்டியவற்றை எளிதாக அறிந்து கொள்ளலாம். அவற்றிற்குரிய ஏற்பாடுகளெல்லாம் அமெரிக்காவில் உள்ளன.

விவசாயிகளுக்கு வேளாண்மைக் கல்வியூட்டும் திட்டம் அந்தந்த இடத்திலுள்ள பலன் விஸ்தரிப்புப் பணியால் நடைபெறுகிறது. நில மானியக் கல்லூரிகள் இந்தத் திட்டத்தை உருவாக்கி, பலன் விஸ்தரிப்புப் பணி மூலம் நடத்தி வைக்கின்றன. அமெரிக்க வேளாண்மை வளர்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணம்.

அதிசயச் சலவை இயந்திரம்

அழுக்குத் துணிகளை இயந்திரங்களே வெளுக்கின்றன; சலவை செய்கின்றன; உலர்த்தியும் விடுகின்றன. சலவைக்கு 25 காசு; உலர்த்துவதற்கு 15 காசு; அவ்வளவு தான். சுலபமாகவும் சிக்கனமாகவும் வேலை முடிந்து விடுகிறது.

அமெரிக்காவில் சுமார் 12,000 தானே இயங்கும் சலவைக் கூடங்கள் இருக்கின்றன.

வெளுக்கும், சலவை செய்யும், உலர்த்தும் இயந்திரங்கள் கொண்ட ஒரு சலவைக் கூடம் அமைக்க சுமார் 35 ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆனால் இது நல்ல வருமானம் தரும் தொழிலாகும்.

பள்ளி ஆசிரியர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், குடும்பப் பெண்கள், ஓய்வு பெற்ற தம்பதிகள், முதலியோர் இத்தகைய சலவைக் கூடம் ஒன்றை அமைத்துக்கொண்டு ஓய்வு நேரத்தில் நிறைய சம்பாதிக்கின்றனர். உண்மையில் அமெரிக்காவில் இருக்கும் இம்மாதிரி சலவைக் கூடங்களில் 90 சத விகிதம், மேலே கூறப்பெற்ற பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன.

இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி தொழில் நடத்தும் "லாண்ட்ரோமாட்" என்று சில சமயங்களில் அழைக்கப்படும் லாண்டிரிகள் (சலவையகங்கள்) பத்திவிருந்து 100இயந்திரங்கள் கொண்டவையாகும். வாரத்தில் ஏழு நாட்களில் 24 மணி நேரமும் வேலை செய்யும் லாண்ரோமாட்டுகள், வேலை செய்யும் பெண்கள்

மணமாகாதவர்கள், புதுமணத் தம்பதிகள், முதலியோருக்கும், இரவு வேலை செய்பவர்களுக்கும் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

பெரிய ஹோட்டல்கள், கல்லூரி விடுதிகள், முதலியவற்றில், தானே இயங்கும் சலவைக் கூடங்கள் உள்ளன.

சில ஹோட்டல்கள் சொந்தமாகவே "சலவைக் கூடங்களை" அமைத்துக் கொண்டிருக்கின்றன. சில ஹோட்டல்கள் இடத்தை மட்டும் இயந்திரங்களின் சொந்தக்காரர்களுக்கு வாடகைக்கு விடுகின்றன. வாடகை செலுத்திய பிறகு கணிசமான தொகை சொந்தக்காரர்களுக்குக் கிடைக்கிறது.

சலவைக் கட்டணத்தையும் இயந்திரங்கள் வசூலித்துக் கொள்கின்றன. ஏனெனில் கட்டணத்திற்குரிய நாணயம் போடாவிடில் இயந்திரம் இயங்காது.

வெளுக்கும் முறை

அழுக்குத் துணியை, வெளுக்கும் இயந்திரத்திற்குள் போட வேண்டியது. துணியைப் போடுபவர் எவ்வளவு வெப்பம் வேண்டும் என்று முடிவு செய்தபின் கட்டணத்தை 5 காசுகளிலிருந்து 35 காசுகள் வரை-அதற்குரிய இடத்தில் போட வேண்டியது. உடனே சலவை இயந்திரம் இயங்கத் துவங்கும். தண்ணீரை நிரப்பிக் கொள்கிறது, துவைக்கிறது, அலசுகிறது, பிழிகிறது, உலர்த்தி விடுகிறது. இயந்திரங்கள் வேலை செய்யும் போது சிகப்பு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும்.

கட்டணத்திற்காகப் போடப்படும் நாணயங்கள் உள்ளே ஒரு பெட்டியில் சேகரிக்கப்பெறுகின்றன. இப்பெட்டியை இரும்புக் கதவுகள் பாதுகாக்கின்றன. சாவி இல்லாமல் இந்தப் பெட்டியை உள்ளிருந்து கூட அகற்ற முடியாது. அவ்வளவு பந்தோபஸ்து.

கடைசியாக, இந்தச் சலவைக் கூடத்தை இயக்க ஆள் யாரும் வேண்டியதில்லை.

பரிசுப் பத்திரங்கள்

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பரிசுக் கடன் பத்திரங்களை வெளியிட்டார்கள். இந்தத் திட்டம் சேமிப்பு இயக்கத்திற்குப் பக்கபலமாக அமைந்துவிட்டது. சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் மக்கள் - அதாவது மக்கள் தொகையில் நால்வருக்கு ஒருவர் வீதம்–பரிசுப் பத்திரங்களை வாங்கியிருப்பது, திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும். பத்திரங்களை வாங்கியவர்களில் சிலருக்கு பரிசுகள் கிடைக்கும்; பலருக்கு ஏமாற்றமேற்படும். ஆயினும் லாபமடையும் அவாவில் ஒவ்வொருவரும் பரிசுப்பத்திரங்களை வாங்குகிறார்கள்.

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய பெருமை பிரதம மந்திரி மாக்மில்லனையே சேரும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் நிதிமந்திரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்; சேமிப்புத்துறையில் மக்களுடைய கவனத்தைத் திரும்பும் நோக்கத்துடன் இந்தத் திட்டத்தைத் தயாரித்து, 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காமன்ஸ் சபையில் சமர்ப்பித்தார்.

தொடக்க நிலையில் இதற்கு எதிர்ப்பு இருந்தது. பரிசுத்திட்டத்தின் மூலம் அரசாங்கம் சூதாட்டத்தி விறங்கி விட்டதே என்று வருந்தியவர்களுமுண்டு. சென்ற நான்கு ஆண்டுகளில் கிடைத்த அனுபவத்தைச் சிந்தித்துப் பார்த்தால், திட்டம் தீங்கு விளைவிக்கவில்லை, பல்லாயிரம் பேர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நன்மையைத் தந்திருக்கிறது என்றே கூறலாம். சுமார் 28 கோடிப்

பவுன்களை பரிசுப் பத்திரங்கள் மூலம் வசூலித்திருக்கிறார்கள்.

பரிசுப் பத்திரங்களை வாங்குவோரில் ஒரு சிலருக்கே பரிசுகள் கிடைக்கும்; மற்றவர்களுக்கு லாபமில்லை என்றாலும் நஷ்டமுமில்லை; போட்ட முதலைத் திரும்பப் பெற்றுவிடலாம். பொதுவாக பத்தாயிரத்திற்கு ஒன்று விகிதத்தில்தான் முதற் பரிசு வாய்ப்புக் கிடைக்கிறது. ஆயினும் ஒவ்வோர் மாதத்திலும் பரிசு பெறுவதற்கான வாய்ப்புக் கிடைப்பதால், ஏதாவது ஒரு மாதத்தில் தனக்குப் பரிசு கிடைத்துவிடலாம் என்ற ஆசையில்தான் ஒவ்வொருவரும் பரிசுப் பத்திரங்களை வாங்குகிறார்கள். சராசரியாக ஒவவொருவரிடமும் 82 பத்திரங்கள் இருப்பதாக தேசீய சேமிப்புத் திட்டக்குழு மதிப்பீடு செய்திருக்கிறது. ஒருவருக்கு ஐந்தாண்டுகளுக்குள் 25 பவுன்கள் பெறுமானமுள்ள ஒரே ஒரு பரிசு கிடைத்தால்கூட, அவருடைய அசல் தொகைக்கு ஆண்டுக்கு பதினாறு சதவிகிதத்தில் வட்டி கிடைத்துவிடும். ஒரு சில தொழில்களில்தான் இம்மாதிரி வட்டியைப் பெறமுடியும். ஒன்றுக்கும் அதிகமாக பரிசு கிடைத்தால், அவர் அதிர்ஷ்டசாலிதான்.

ஒவ்வொரு மாதத்திலும் பரிசு கிடைக்காமல் பலர் ஏமாற்றமடைவார்கள். ஏமாற்றமேற்பட்டாலும் அடுத்த மாதம் பரிசுவிழக்கூடும் என்ற நம்பிக்கை துளிர்ப்பதால் ஏமாற்றத்தின் வேகம் விரைவில் தணிந்துவிடும். ஒரு பவுனுக்கு ஆயிரம் பவுன் பரிசு கிடைக்கும் என்ற பேரவா எழுந்தாலும், சூதாட்டத்தைப்போல இதில் இழப்பு இல்லை. பரிசுப் பத்திரம் வாங்கிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிறகுதான், அதற்கு பரிசு பெறும்தகுதி ஏற்படுகிறது. இந்தத் தகுதிகால வரம்பைக் குறைக்க வேண்டும் என்று சிலர் கருதியதுண்டு. காலவரம்பைக்

குறைத்தால் நிர்வாகச் செலவு பெருகக்கூடும் என்பது அனுபவத்தால் தெரிந்தது. குறுகிய காலத்திற்கு முதலீடு செய்வதில் ஆதாயமுமில்லை.

பரிசு பெறுவோர் எண்ணிக்கை பெருகி வருவதும் பலருடைய கவனத்தை ஈர்த்திருக்கிறது; திட்ட வெற்றிக்குத் தூண்டுதலாக அமைந்திருக்கிறது. சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் பரிசு பெற்றவர்கள் எண்ணிக்கை 19,028; விவரம் வருமாறு: 1000 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 79 பேர்கள்; 500 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 158; 250 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 316; 100 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 790; 50 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 1580; 25 பவுன்கள் பரிசு பெற்றவர்கள் 16,105. கடைசிப் பரிசு பெற்றவர்கள் எண்ணிக்கைதான் திட்டத்திற்கு வலுவூட்டுகிறது. முதற்பரிசு - ஆயிரம் பவுன்கள்- கிடைக்காவிட்டாலும் கடைசிப் பரிசாவது-25 பவுன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு இது உதவுகிறது.

பரிசுத்திட்டம் தொடங்கிய நாளிலிருந்து நாளது வரையில் பரிசாக வழங்கியுள்ள தொகையின் மதிப்பு ஒரு கோடியே எழுபது லட்சம் பவுன்கள். இது அற்ப சொற்பமான தொகையல்ல. இன்ன எண்ணுடைய பத்திரத்திற்குப்பரிசு விழுந்திருக்கிறதுஎன்றுதான் அறிவிக்கப் பெறும். பரிசு பெறுவோருடைய பெயரை வெளியிடுவதில்லை. பரிசுத்திட்டம் என்றாலும் இது அரசாங்கத்தாருக்கும் பத்திரங்களை வாங்குவோருக்குமுள்ள தனி உறவு ஆகையால், பரிசு பெறுவோர் பெயர்களைப் பகிரங்கமாக அறிவிப்பது முறையல்ல.

ஒரு சிலருக்கு நான்கு பரிசுகள் கிடைத்திருக்கிறது. சிலருக்கு பரிசே கிடைக்கவில்லை. ஆனால் ஒரே எண்ணு

டைய பத்திரத்திற்கு இரண்டுதடவை பரிசு கிடைத்த தில்லை. பரிசு விழுந்தாலும் அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளாமல் இருப்போரும் உண்டு. முகவரி மாறுதல் அல்லது வேறு காரணங்களால் ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பாக 25 பவுன்-பரிசுகள் சில கேட்பாரற்று தங்கி விடுவதுமுண்டு. தபால் நிலையங்கள் மூலம் பரிசுப் பத்தி ரங்கள் விற்பனையாவதால், அவற்றின் மூலமே, பரிசுத் தொகைகளும் வழங்கப்பெறுகின்றது. கேட்பாரற்றுத் தங்கிவிடும் பரிசுத் தொகைகளை தேசிய கடன் கமிஷனர் அலுவலகத்திற்கு அனுப்பிவிடுவார்கள். உரிமையாளர் களைப்பற்றித் தவல் கிடைத்ததும் அவர்களுக்குச் சேர வேண்டியதொகையை அளிக்க ஏற்பாடு செய்யப்பெறும்.

பரிசுப் பத்திரத்திட்ட அலுவலகத்தில் சுமார் ஆயிரம் பேர்கள் உழைக்கிறார்கள். 1958-59 நிதி ஆண்டில் நிர்வாகம் விளம்பரம், விற்பனைக் கழிவு என்ற வகையில் சுமார் 15 லட்சம் பவுன்கள் செலவாயிற்று. இதுமொத்த மதிப்பீட்டில் ஒரு சதத்திற்கும் குறைவான தொகை யாகும்.

ஸ்காண்டிநேவியா அரசுகள் புட்பால்பந்தயம் நடத்திப் பரிசுகளை வழங்குகின்றன. வேறு சில அரசுகள் லாட்ட ரிச்சீட்டு நடத்துகின்றன. ஆனால் பிரிட்டனைப்போல பரிசுப்பத்திரங்களை வழங்கும் திட்டம் வேறெங்கு மில்லை. இப்பொழுது இந்தியா பரிசுப் பத்திரங்களை வழங்க ஆரம்பித்திருக்கிறது.

பெண்கள் தோட்டக்கலைப் பள்ளி

இயற்கையில் தமக்கிருந்த ஈடுபாடு, இயற்கை யழகை அனைவரும் கண்டு இன்புற வேண்டும் என்ற எண்ணம் ஆகியவற்றால் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு ஒருவர் பெண்களுக்கெனத் தோட்டக்கலைப் பள்ளிக்கூடம் ஒன்றை ஹாலந்து நாட்டில் அமைத்தார். அவரது விடாமுயற்சி, துணிவு முதலியவையே அந்தப் பள்ளிக்கூடம் அமையக் காரணமாயிருந்தன.

அது ஒரு தனியார் நிறுவனமாகவே அமைந்திருந் தது. அதற்கு வேண்டிய நிதி முதலிய பொறுப்புக்களை அதை ஆரம்பித்தவர்களே ஏற்றுக் கொண்டார்கள். தமது வீட்டெல்லையில் தோட்டத்தை வளர்த்து மகிழ விரும்பிய பெண்களுக்குப் பயிற்சி யளிக்கும் நிலைய மாகவே அது முதலில் இருந்து வந்தது.

மாணவர்களின் தொகை படிப்படியாக மிகுதியாகி அது ஒரு பெரிய நிலையமாக மாறியது.

தனியார் மட்டுமன்றி அரசாங்க விவசாயத் துறை யினரும் அந்தப் பள்ளிக்கூடத்தில் அக்கறை காட்டத் தொடங்கினர். மாணவர்களுக்கு முழுப் பயிற்சி யளிப் பதற் கென, தோட்டக் கலையின் நவீன உத்திகளெல் லாம் கற்பிக்கப்பெறுகின்றன.

1907 ஆம் ஆண்டில் அந்தப் பள்ளிக்கூடம் துவங் கியபோது பயிற்சி வகுப்புக்கள்தான் மிகுதியாக இருந் தன. இப்போது எல்லா வகுப்புகளும் நடைபெறுகின்

றன. நிலவியல், பொருளாதாரம், பூந்தோட்ட வளர்ப்பு முதலியவற்றில் பாடம் கற்பிக்கிறார்கள். காய்கறி-பழம் பயிரிடுதல், பூச்செடிகளை வளர்த்தல், பூந்தோட்டப் பயிர், தோட்டங்களைப் பராமரித்தல் முதலியவற்றில் மாணவர்கள் நல்ல தேர்ச்சி பெற வேண்டும். பூக்களை அழகாக அமைப்பதில் கலையுணர்ச்சி வெளிப்படும்.

பெண்களுக்கான அந்த உயர்தரத் தோட்டக்கலைப் பள்ளிக்கூடத்தில் மூன்றரையாண்டுகள் பயிலவேண்டும். இதில் ஐந்து மாதங்கள் நேரடிப் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

செகண்டரி கல்வி கற்று முடித்தவர்களே சேர்த்துக் கொள்ளப் பெறுவார்கள். முதலாண்டில் பொதுவான பாடங்களும் பயிற்சி முறையும் கற்பிக்கிறார்கள். விசேஷ பாடங்கள் இரண்டு மூன்றாண்டுகளில் கற்பிக்கப்பெறுகின்றன.

தோட்டப் பயிர் நிறைந்த பரப்பைப் பாதுகாக்கும் பொறுப்பை மாணவர்களிடமே ஒப்படைத்திருக்கிறார்கள்

பயிற்சி முடிந்து பட்டம் பெற்றதும் மாணவர்கள் சமூகத்தின் நல்ல அங்கங்களாக விளங்கவேண்டும்.

விஞ்ஞான அறிவைச் செயல்முறையில் பயன்படுத்துவதற்குப் பல்லாண்டுகளாக முயன்று, தோட்டப் பயிர் வருவாய்க்கு உதவும் வகையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் இப்போது சமூகத்தில் ஒரு நிரந்தர இடம் பெற்றிருக்கிறது. அதில் படித்து முடித்தவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சி, தகவல் அறிவிப்பு முதலியவற்றில் துணை புரிவது மட்டுமன்றி தமது அறிவைப் பலவிதங்களிலும் பயன் படுத்துகிறார்கள்.

குழந்தை நிலையங்கள், பயிற்சிக் கழகங்கள், மருத்துவ நிலையங்கள் முதலியவற்றிலும் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளும் வாய்ப்பும் பெருகி வருகிறது.

“நடமாடும் நூல்நிலையங்கள் சமூகத்துக்குத் தேவையில்லை; தம் முயற்சியைப் பெருக்கி, பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களே தேவை” என்று அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியை கூறியது, குழந்தைகளின் நிலையங்களிலும் மருத்துவ நிலையங்களிலும் பணியாற்றி, தோட்டக் கலையை ஒரு சமுதாயப் பணியாக மாற்றி வருபவர்களுக்கு மிகவும் பொருந்தும் இயற்கையில் தமக்குள்ள ஈடுபாட்டை, அவர்கள், தமதுபொறுப்பில் விடப்பெற்றவர்கள் விஷயத்தில் அன்பாக மாற்றிக் கொள்கிறார்கள்.

மதுர கவி

வெகு காலத்துக்கு முன்பு, மகத தேசத்தை விஜய குப்தன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய தர்பாரில் பல கவிகளும் அறிஞர்களும் இருந்தார்கள். ஆனால், அரசருக்கு மதுரகவி என்ற கவிஞரிடமே மிக்க அன்பு. மதுர கவி தெய்வ பக்தி மிக்கவர். புத்தி சாதுரியம் நிறைந்தவர். அரசர், அவருக்கு நாள் தோறும் பல பரிசுகளை அளித்து மரியாதை செய்து வந்தார்.

இது மற்றக் கவிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எப்படியாவது மதுர கவியை அந்த ராஜ்யத்திலிருந்து வெளியேற்ற விரும்பினார்கள். இதற்கு வழி என்ன என்று யோசித்துப் பார்த்தார்கள். ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, அரசரின் முன்பு போய் நின்று, "அரசே, ஒரு விண்ணப்பம்" என்றார்கள்.

"என்ன சொல்லுங்கள்" என்றார் அரசர்.

"மதுர கவிக்கு ஒன்றுமே தெரியாது. அவர் அரசரை ஏமாற்றி ஏராளமான பரிசுகள் வாங்குகிறார். இந்தச் சூழ்ச்சியைத் தங்களுக்குச் சொல்லவே வந்தோம். நாங்கள் சொல்லுவது உண்மையா, பொய்யா என்பதை அறிய வேண்டுமானால், அவரைச் சோதனை செய்து பார்க்கலாம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

அரசரும் சற்று யோசித்தார். மற்றக் கவிஞர்கள் சொல்லுவது உண்மையாக இருக்கலாமோ என்று அவ

ருக்கும் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. ஆகை யால், மதுர கவியைப் பரிசோதனை செய்ய அவரும் விரும் பினார்.

"இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார் அரசர்.

"ஒரு கேள்வி கேளுங்கள், தெரிந்து போகிறது. உதாரணமாக, உள்ளங்கையில் ஏன் மயிர் முளைக்க வில்லை என்று கேளுங்கள், சின்னக் கேள்வி, இதற்கா வது பதில் சொல்லத் தெரிகிறதா என்று பார்க்கலாம்" என்றார்கள் கவிஞர்கள்.

அரசருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் மதுர கவியைக் கூப்பிட்டு, "ஒரு சிறு சந்தேகம், அதைத் தீர்க்க மற்றவர்களால் முடியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள். என் உள்ளங்கையில் ஏன் மயிர் முளைக்கவில்லை?" என்று கேட்டார்.

மதுர கவி சற்று நேரம் யோசித்துப் பார்த்தார். அவர் புத்தி சாதுரியம் மிக்கவர் அல்லவா? ஒரு கணத் தில் எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டார். பொறு மைக்காரர்கள் வெட்கப்படும்படி ஒரு வழி கண்டுபிடித் தார். அவருடைய முகம் மலர்ந்தது.

"அரசே! தானம் கொடுத்துக் கொடுத்துத் தங் கள் கை தேய்ந்து மயிர் இருந்த அடையாளமே தெரிய வில்லை" என்றார் மதுர கவி.

"அரசருக்கு அளவு கடந்த ஆனந்தம் உண்டாயிற்று. இந்த மாதிரிச் சாதுரியமாகப் பதில் சொல்லுவார்என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. ஆகையால், அவர் தம்மு

டைய முத்துமாலையை மதுர கவிக்குப் பரிசாக வழங்கி விட்டு, "இன்னொரு கேள்வி, என் கைதான் தானம் கொடுத்து, தேய்ந்து, வழுக்கையாகி விட்டது என்கிறீர்கள். ஆனால் உங்கள் கையில் ஏன் மயிர் இல்லை?" என்றார்.

"அது தானம் வாங்கி வாங்கி, தேய்ந்து, வழுக்கையாகிவிட்டது" என்று சட்டென்று பதில் அளித்தார் மதுர கவி.

"சபாஷ்!" என்றார் அரசர்.

மற்றக் கவிகளின் முகம் பொறுமையால் பொங்கியது. அவர்கள் தங்கள் கைகளைக்காட்டி, "எங்கள் கைகளில் மயிர் இல்லையே. அதற்கு என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார்கள்.

மதுரகவி சிரித்துக்கொண்டே, "அதற்கு நான் என்ன செய்வது? உங்கள் நடத்தையும் மனப்பான்மையும் தான் அதன் காரணம். தானம் வாங்கிக் கொண்டு போகிறவர்களைப் பார்த்துப் பார்த்து நீங்கள் பொறுமைப் படுகிறீர்கள். மனத்துக்குள்ளே வெதும்பி, கைகளைப் பிசைவதால் உஷ்ணம் உண்டாகி, உங்கள் கை வழுக்கையாகிவிட்டது" என்றார் மதுரகவி.

அந்தப் புலவர்கள் வெட்கத்தால் தலை குனிந்தார்கள். அரசர், மதுர கவியைத் தம் அருகே அழைத்து, அவரைத் தழுவிக் கொண்டார்.

விண் வெளிப் பயணம்

அமெரிக்காவின் "விண் வெளியில் மனிதன" திட்டம் சம்பந்தமான ஏற்பாடுகளில் ஒத்துழைக்க ஸ்பெயின் முன் வந்துள்ளது. ஸ்பெயினுக்குச் சொந்தமான கானரித் தீவுகளில் ஒரு சோதனை நிலையம் நிறுவப் பெறும். மெர்க்குரித் திட்டத்தின் மனிதன் செல்லும் செயற்கைக் கோளத்தின் திசையறி நிலையங்கள் நிறுவும் ஏற்பாட்டின் படி நிறுவப் பெற இருக்கும் 16 நிலையங்களில் ஒன்று கானரித் தீவு நிலையம். இதை நிறுவுவதற்கு சுமார் 75 லட்சம் ரூபாய் செலவாகும்; நிறுவும் வேலை விரைவில் தொடங்கும்.

ராணுவ நோக்கமற்ற விஞ்ஞானத் திட்டம், மெர்க்குரித் திட்டம். மனிதன் ஒருவனைச் செயற்கைக் கோளத்தில் வைத்து, விண் வெளியில் அனுப்பி, ஒரு கட்டுப்படுத்தக் கூடிய பாதையில் அவன் கோளத்துடன் சுற்றி வருமாறு செய்து பின்பு மனிதனையும், கோளத்தையும்,பத்திரமாகப் பூமிக்குக்கொண்டு வருவது மெர்க்குரித் திட்டமாகும். விண் வெளிப் பயணத்தைத் தாங்குவதற்கு மனிதனுக்குள்ள திறன் பற்றி ஆராய்வது திட்டத்தின் நோக்கம். தேசிய விமான இயல் விண் வெளி நிலையம் இதனை நடத்துகிறது.

மனிதன் உள்ள மெர்க்குரிக் கூண்டு அமெரிக்காவின் தென்கிழக்குக் கோடியிலிருந்து ராக்கெட் மூலம் விண் வெளி வீதியில் செலுத்தப்பெறும். பூமியிலிருந்து 100 முதல் 150 மைல் வரையுள்ள உயரங்களில் விண் வெளி

யில் மூன்று முறை பூமியைச் செயற்கைக் கோளுடன் மனிதன் வலம் வருவதே தற்போதையத் திட்டம்; மும் முறை வலம் வந்ததும் மனிதனுடன் கூண்டு பூமிக்குத் திரும்பி வருமாறு செய்யப்பெறும்.

கூண்டைத் திரும்பப் பூமிக்குக் கொண்டு வரும் நட வடிக்கையின் இன்றியமையாத பகுதியே மெர்க்குரிக் கோளத் திசையறி நிலையங்கள் நிறுவும் திட்டம். உலகம் முழுவதிலும் பூமியிலுள்ள நிலையங்கள் ராடார் உதவின் மூலம் கூண்டின் விண் வெளிப் பாதையைப் பதிவு செய் யும். கூண்டின் இயக்கம் பற்றிய விஞ்ஞானத் தகவல் களும் விண் வெளி மனிதன் பயணத்தை எவ்வாறு தாங்கு கிறன் என்பன பற்றிய தகவல்களும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பெறும்.

விண் வெளி மனிதனுடன் தொடர்பு கொள்வதற்கும், பூமிக்கு அவன் திரும்ப வருவதை ஒழுங்கு படுத்துவதற் கும் வேண்டிய கருவிகள் பூமியிலுள்ள சோதனை நிலையங் களில் இருக்கும்.

மற்ற நிலையங்களைப் போலவே, கானரித் தீவு நிலைய மும் மெர்க்குரி கோளம் தனது எல்லையில் வரும்போது விஞ்ஞானத் தகவல்களைப் பதிவு செய்யப் பொறுப்பு வகிக்கும். வானொலித் தொலை பேசி மூலம் செயற்கைக் கோளத்திலுள்ள மனிதனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு வசதி இருக்கும்.

மெர்க்குரி ஆராய்ச்சித் திட்டத்தின் பலன்கள் உல கம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகளுக்குத் தெரிவிக்கப் பெறும். வரலாற்றுச் சிறப்புள்ள விண் வெளிப் பய ணத்துக்கெனத் தெரிந்து எடுக்கப்பெற்றுள்ள ஏழு இளை ஞர்களும் தற்போது தீவிரமான பயிற்சி பெற்று வருகின் றனர்.

பயோனீர்-5

விண் வெளிச் செயற்கைக் கோளம் ஒன்று எவ்வளவு நாள் பேச முடியும்?

விண் வெளிச் சகாப்தம் நனவானது முதல் விஞ்ஞானிகளையும், பாமர மக்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ள கேள்வி அது. ஏனெனில் பூமிக்கு மேலுள்ள பரந்த விண் வெளியை மனிதன் தானே ஊடுருவிச் செல்லக் கூடிய தருணம் வரும் வரையில், கோளம் விட்டுக் கோளம் செல்லும் விண் வெளிப் பயணம் பற்றிய இன்றியமையாத கேள்விகளுக்குப் பதில் கிடைத்தாக வேண்டும். யார் பதில் சொல்ல முடியும்? நம்பக்கூட முடியாத அளவு சிக்கலான தகவல் அறிவிப்புக் கருவிகள் வைக்கப்பட்டுள்ள, மனிதன் இல்லாத செயற்கைக் கோளங்கள் தாம் பதில் சொல்ல முடியும்.

சமீபத்தில் விண் வெளியில் செலுத்தப்பெற்ற புதிய அமெரிக்கச்செயற்கைக்கோளமான 'பயோனீர்-5' விண் வெளிப்பயணம் பற்றிய பலவேறு ஐயப்பாடுகளுக்குப் பதில் சொல்லக்கூடும். விண் வெளியில் ஊடுருவிச் செல்லக்கூடிய தூரம் பற்றி மட்டுமன்றி, அது தனது வானொலிக்குரல் எவ்வளவு காலம் கேட்கும்; எவ்வளவு தொலைவு கேட்கும் என்பன போன்ற தகவல்களையும் அறிவிக்கும்.

அமெரிக்காவின் பத்தொன்பதாவது விண் வெளி ஆராய்ச்சிக் கோளமும், சூரியனைச் சுற்றி வர அமெரிக்கா அனுப்பிய பயோனீர்-5 தனது இலக்கை அடைய ஐந்து மாதத்துக்கு மேலாகலாம் அதனுடைய இலக்கு சுக்கிரன் (வெள்ளி) சுழலும் பாதைக்கு அருகில் இருக்கும். எல்லாம் சீராக நடந்தால் இந்தச் செயற்கைக் கோளம் சூரியனை நோக்கிச் செல்லும் தனது பயணத்தின்போது

மட்டுமன்றி, அது தனது வீதியில் சுற்றி வரும் போதும் சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதமும் விஞ்ஞானத் தகவல்களைப் பூமிக்கு அனுப்பி வரும். அதாவது பூமியி லிருந்து கேட்கும் தொலைவில் - 5 கோடி மைல் தூரத்தில் அது வலம் வரும்போது அது அனுப்பும் வானொலி அலை களைக் கேட்க முடியும். சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் அது அவ்வாறு கேட்கும் தொலைவில் வலம் வரும்.

இதுவரையில், கருவிகள் நெருக்கமாகப் பிணைத்து வைக்கப்பெற்றுள்ள பயோனீர்-5 கோளத்தின் தகவ லறிவிப்பு வேலை ஒழுங்காக நடைபெற்று வருகிறது. கோளத்தின் நான்கு சுழல் துடுப்புக் கால்களிலுமுள்ள சூரிய சக்தி மின்கலங்கள் திட்டமிட்டுள்ளபடி, கோளத் தின் ஒலிப்பரப்புக் கருவிகளுக்கு மின்விசை வழங்கி வருகின்றன. அதில் இரு ஒலிபரப்புக் கருவிகள் உள்ளன; ஒன்று சிறியது. அது ஐந்து வாட் மின்விசை சக்தி படைத்தது. அது ஒலி அலைகளையும், கட்டளையிடும் போது வெப்பம், கதிரியக்கம், காந்த மண்டலங்கள், மின் செறிவுள்ள துகள்-மேகங்கள், விண்வெளிக் கொள்ளி கள் முதலியன பற்றிய தகவல்களையும் அனுப்பி வருகி றது.

பூமியிலிருந்து 50 லட்சம் மைல் உயரத்தில் பயோ னீர்–5 செல்லும்போது, அதிலுள்ள பெரிய ஒலிபரப்புக் கருவி (150 வாட் சக்தியுள்ளது) வேலை செய்யத் தொடங்கும். கோளம் எவ்வளவுக் கெவ்வளவு சூரிய னின் அருகில் செல்லுகிறதோ — சூரியனிலிருந்து 7 கோடியே 45லட்சம் மைல் தொலைவு வரை அது போகக் கூடும்—அவ்வளவு அதிக மின்விசையைக் கோளத்தி லுள்ள சூரிய சக்தி மின்கலங்கள் உற்பத்தி செய்யமுடி யும். 150 வாட் சக்தியிருந்தால் வானொலி அலைகள்

5 கோடி மைல் தூரத்தைக் கடந்து, பூமியை எட்ட முடியுமென நம்பப்பெறுகிறது.

சூரியனைச் சுற்றி வலம் வருவதற்கான தனது பாதையை அது அடைவதன் பொருட்டு, அது சூரியன் சுழலும் திசைக்கு எதிர்த்திசையில் செலுத்தப்பெற்றது. (தனது பாதையை அது அடைய 310 நாளாகுமெனக் கணக்கிட்டுள்ளனர்). கோளத்தின் வேகத்தைக் குறைத்து, அது சூரியனுக்கு அருகில் சென்று தனது பாதையில் வலம் வருவதன் பொருட்டே அவ்வாறு எதிர்த்திசையில் செலுத்தப்பெற்றது.

விஞ்ஞானிகள் கணக்கிட வேண்டிய கற்பனைக் கெட்டாத தூரங்கள் பற்றித் தெரிந்துகொள்ள ஓர் உதாரணம் கூறலாம். பயோனீர்-5 கோளத்தைச் செலுத்துகையில் ஒரு சிறு பிசகு நேரிட்டது. இதனால் அதன் வேகம் மணிக்கு 150 மைல் குறைந்தது; அதாவது தேவைப்பட்ட வேகம் மணிக்கு 5 670 மைல்; ஆனால் கிடைத்த வேகம் 5520 மைல்தான். இச்சிறிய குறைவினால் கோளம் செல்லும் பாதை 75 லட்சம் மைல் அதிகமாகிவிட்டது.

ஏற்கெனவே அமெரிக்கா செலுத்திய பயோனீர்-4, ருஷ்யா அனுப்பிய மெஷ்டா கோளம் இரண்டும் சூரியனை வலம்வந்த வண்ணமிருக்கின்றன; அவற்றுடன் பயோனீர்-5-ம் போய்ச் சேர்ந்து கொண்டுள்ளது. ஆனால் முதலில் சொன்ன இரு கோளங்களின் ஒலிபரப்புக்கருவிகளும் செயலற்றுப் போனபின்பே அவை தம் பாதையில் போய்ச் சேர்ந்தன; எனவே விஞ்ஞான உலகுக்கு அவற்றால் மேற்கொண்டும் பலனில்லாது போய் விட்டது.

ஆனால் புதிய கோளத்தின் ஒலிபரப்புக் கருவிகள் காலவரம்பின்றி வேலை செய்யும் ஆற்றல் படைத்தவை.

எனவே அது பல நூற்றாண்டுகளுக்கு இல்லாவிடினும், பல ஆண்டுகளுக்காயினும் பூமி, சந்திர மண்டலங்களுக்கு மேலேயுள்ள நிலைமைகள் பற்றித் தகவல் கொடுக்க முடியும்.

விண்வெளியிலிருந்து எவ்வளவு காலத்துக்கு இந்தக் குரல் பூமியை எட்டுமென்பதற்கு, பயோனீர் 5-க்கு முன்பு அனுப்பப்பெற்ற வான்கார்டு-1 பதில் அளிக்கும். சரியாக இரண்டாண்டுகளுக்கு முன்பு அது விண்வெளியில் செலுத்தப்பெற்றது. 'குட்டிக் கோளம்' என்ற சிறப்புப் பெயரும் அதற்கு உண்டு. 1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் தேதி அது வானைக் கிழித்துக் கொண்டு விண்வெளியில் பாய்ந்தது. இதுவரை அது 8000 தடவைக்குமேல் பூமியை வலம் வந்துள்ளது, இடையறாமல் அது 'பீப்—பீப்—பீப்' என்று குரல் கொடுத்து வருகிறது.

மற்றப் பெரிய செயற்கைக் கோளங்கள் பெரும் புகழ் பெற்றிருக்கலாம்; ஆனால் அவற்றில் எதுவும் ஆயுள் காலம், விஞ்ஞானப் புதுமைகள் கண்டுபிடிப்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் வான்கார்டு-1 கோளத்தை மிஞ்சிவிட முடியாது. விண்வெளியில் இரண்டாண்டுக் காலத்தில் அது ஆற்றியுள்ள அரும் பணி மிகப் பெரிது.

அதன் சாதனைகள் சிலவற்றை மட்டும் இங்கு தருவோம்:

(1) சூரிய வெளிச்சத்தைத் தனது ஒலிபரப்புக் கருவிக்குத் தேவைப்படும் மின் விசையாக மாற்றிய முதல் கோளம் அது தான்.

(2) உலகம் வால்பேரிக்காய் வடிவத்தில் இருப்பதைக் கண்டுபிடித்ததும் அதுவே; இதனால் நுணுக்கமாக

அளவிடுவதும், தேசப் படங்கள் தயாரிப்பதும் சாத்திய மாயிற்று.

(3) முன்பு நினைக்கப் பெற்று வந்ததைவிட, பூமத்திய ரேகையில் பூமியின் உப்புதல் மிகக் குறைவாகவே இருப்பதாக அது தெரிவித்தது.

(4) சூரியச் கதிரியக்கத்தில் குறித்த காலக் கிரமப்படி ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப வாயு மண்டலத்தின் மிக உயரமான பகுதியிலுள்ள காற்றின் அழுத்தம் மாறுதல் அடைகிறது என்பதை அது கண்டு பிடித்தது.

(5) பூமியின் காந்த மண்டலத்தில் ஏற்படும் மின் விசை ஓட்டங்கள் பற்றி அது தகவல் கொடுத்தது.

'குட்டிக் கோளம்' தந்த தகவல்களைக் கொண்டு இப்போது—1960-ஆம் ஆண்டில் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதப் பெற்று வருகின்றன. அது எவ்வளவு காலம் விண் வெளியில் வலம் வருமென்று யாருக்கும் தெரியாது. அதன் கடந்தகாலச் செயல்களின் அடிப்படையில், ஆயிரம் ஆண்டுகள் தங்காதெனினும், அது இன்னும் இருநூறு ஆண்டுகள் விண் வெளியில் தங்குமென விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றனர்; இது பயோனீர்-5-ன் ஆயுள் காலம் பற்றிப் பலர் கூறும் மதிப்பீட்டில் மிகக் குறுகிய காலமே யாகும். வெயில் விசையால் பேசும் வான்கார்டு-1, பயோனீர் - 5 ஆகியவற்றின் குரலை நமது பேரக் குழந்தைகளும் அவர்களுக்குப் பின் வரும் சந்ததியார்களும் கேட்கக் கூடும் என்று நினைப்பதே பெரும் வியப்பளிக்கிறது; அக்காலத்துக்குள் ஒரு வேளை அவை ஆற்றும் பணிகள் விண் வெளி சகாப்தத்தின் 'பத்தாம் பசலி'ச் சேதியாகவும் ஆகிவிடலாம்; யார் கண்டார்கள்?

செய்திக் களஞ்சியம்

செய்தித்தாள் அலுவலகத்தில், ஒவ்வோர் பிரிவைச் சேர்ந்தவர்களும் மின்னல் வேகத்தில் செயலாற்றுகிறுர் கள். எங்கோ ஓரிடத்தில் ரெயில் விபத்து ஏற்படுகி றது. ஒரு சில மணி நேரத்தில் அந்த நிகழ்ச்சி பற்றிய செய்திகளை—விபத்து நேர்ந்தது எப்படி, உயிர்ச்சேத முண்டா, காயமடைந்தோர் எத்தனை பேர்கள், தலைமை அலுவலகத்திற்கு எப்போது செய்தி கிடைத்தது, உதவி அனுப்பப்பெற்றதா எனப் பல தகவல்களை—செய்தித் தாள் மூலம் மக்கள் தெரிந்து கொள்வார்கள்.

செய்திகளைச் சேகரிப்பது ஒரு தொழில். ஆனால் சிறு தவறுக்குமிடமில்லாமல் சரியான தகவல்களைத் தருவ தற்கு தனித்திறமை வேண்டும் ரெயில் விபத்துப் பற்றி ஒரு நிருபர் கேள்விப்படுகிறுர். விபத்து நடந்த இடம் எது? அந்த இடத்திற்கு விரைவில் போய்ச்சேர வழி என்ன? அருகிலுள்ள நகரத்தின் பெயர் என்ன? என இம்மாதிரிப் பல தகவல்களைத் தெரிந்துகொள்வதில் நிருபர் அக்கறை காட்டுவார். உதவி ஆசிரியர், டெலி போன் அல்லது தந்தி மூலம், நிருபர் தரும் செய்தியை, நறுக்கியோ, நீட்டியோ செம்மைப் படுத்தி அச்சிடும் பிரிவுக்கு அனுப்புவார். விபத்தில் சிக்கியவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொள்வார்; பிரமுகர் களிருந்தால், அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்களை சேகரித்துக் கொள்வார். எஞ்சின் கோளாறு காரண மாக விபத்து நேர்ந்திருக்குமானல் எஞ்சினைப் பற்றிய தகவல்களைத் தருவார். இவை அனைத்தையும் துரித

மாகச் சேகரித்துத் தருவது எப்படி? ஒவ்வோர் செய்தித் தாள் அலுவலகத்திலும். செய்தித் துணுக்குகளையும், தகவல்களையும் பிரமுகர் வாழ்க்கைக் குறிப்புக்களையும், சேகரித்துத் தேதி வரிசையாகத் தொகுத்து வைக்கும் நூலகப் பிரிவு உண்டு. இந்தப் பிரிவில் நாள்தோறும் எண்ணற்ற செய்திகளைச் சேகரித்து வகைப்படுத்தி வைப்பதுண்டு. நாடு, பிரமுகர், நிகழ்ச்சி முதலியவற்றைக்கூறும் ஆண்டு வெளியீடுகளும் தகவல் ஏடுகளும் இங்குண்டு.

செய்தி ஆசிரியர் விபத்தைப்பற்றித் தெரிந்துகொள்கிறார். முன்புகூட இதே இடத்தில் ஓர் விபத்து நிகழ்ந்ததாக அவருக்கு நினைப்பு வருகிறது. உடனே நூலகப் பிரிவு நிர்வாகியிடம் தகவல் கோருகிறார். செய்தி ஆசிரியருடைய நினைப்பு சரியாகவும் இருக்கலாம், தவருகவும் இருக்கலாம். நூலகப் பிரிவு நிர்வாகி உடனே பதில் கூறிவிடமாட்டார். ரெயில் விபத்துச் செய்திகளைப் பற்றிய தொகுப்பைப் புரட்டிப் பார்த்தப் பிறகு தான் பதில் கூறுவார். பெரிய தினத்தாள் நிலையங்களில் இம்மாதிரி நிகழ்ச்சிகளைத் தினந்தோறும் காணலாம். செய்திகளைச் சேகரித்து வழங்குவது பெரிதல்ல, அவற்றைச் சிறந்த முறையில் வழங்குவதுதான் பெருமை. நிருபர்களும் ஆசிரியர்களும் எல்லாத் துறைகளிலும் வல்லவர்களாக இருக்க முடியாது. ஆனல் நூலகத்தின் உதவியால் சிறந்த முறையில் செய்திகளை வழங்க முடியும். நூலகப் பிரிவு, செய்திக் களஞ்சியமாயிருந்தால் ஒரு சில நிமிஷங்களில் வேண்டும் தகவல்களைக் குறித்துக்கொள்ள முடியும்.

லண்டனுக்கு விஜயம் செய்யும் உலகப்புகழ்பெற்ற ஒருவரைப் பேட்டி காண தினத்தாள் நிருபர் ஒருவர் செல்வதாக வைத்துக்கொள்வோம். அந்தப் பிரமுகரின் கொள்கைகள் - செயல்களைப்பற்றி ஏதாவது தெரிந்து

கொண்டிருந்தால்தான் பேட்டி சுவையான நிகழ்ச்சியாக அமையும். பேட்டிகாணச் செல்லுமுன்பு, நிருபர், நூலகப் பிரிவுக்குச் சென்று, பிரமுகரைப்பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வார்.

செய்தித்தாள் நூலகத்தில் இன்ன தகவல் கிடைக்கும், இன்ன தகவல் கிடைக்காது என்பதில்லை. எதைப் பற்றிக் கேட்டாலும் தகவல் தரும் நிலையில் இருக்க வேண்டும். அங்கு நிதானமாகவோ கால அட்டவணைப் படியோ செயலாற்ற முடியாது. மின்னல் வேகத்தில் செயலாற்ற வேண்டும். ஒரு நிமிஷம் தாமதம் ஏற்படுவதைக்கூடப் பொறுத்துக்கொள்ள முடியாது. குறித்த நேரத்தில் பத்திரிகை வெளிவந்தால்தான் பிரதிகளை வெளியூர்களுக்கு அனுப்பமுடியும். ரெயில்தவறிவிட்டால், விளைவு நஷ்டந்தான். பத்திரிகையின் கடைசிப் பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கும்போது, எங்கோ ஓரிடத்தில் நிலநடுக்கமேற்படலாம், கப்பல் முழுகிப்போகலாம். புகழ்பெற்ற ஒருவருடைய மரணச்செய்தி கிடைக்கலாம். இந்தக் கடைசிச் செய்திகளை, ஏற்றமுறையில் குறிப்புகளைச் சேர்த்து வெளியிடுவதற்கு துரிதமும் திறமையும் வேண்டும்.

தினத்தாள் அலுவலகத்தில், செய்தித் துணுக்குகளை வகைப்படுத்தும் நூலகப் பிரிவுதான் உயிர்நிலைப் பகுதி. தகவல் ஏடுகளிலும் ஆண்டு வெளியீடுகளிலும் கிடைக்காத தகவல்களைச் செய்தித் தொகுப்புக்களிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, ஒரு நாட்டின் ஆளும் கட்சியைத் தெரிந்து கொள்ள விரும்பும் நிருபர் ஆண்டுத் தகவல் ஏட்டைப் புரட்டிப் பார்க்கலாம். அந்த ஏடு வெளிவரும்போது அல்லது சிறிது காலத்திற்கு முன்பு புரட்சி அல்லது வேறு காரணங்களால் அந்த நாட்டில் அரசாங்கம் மாறியிருந்தால் என்ன செய்

வது? செய்தித் தொகுப்பிலிருந்து கடைசி நிகழ்ச்சி வரையிலுள்ள தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும். அந்த அந்த நாட்டு செய்தித் தகவல் பணிநிலையங்கள் வெளியிடும் தகவல்களைத் தொகுத்து வைத்துக் கொள் வதன் மூலம் இம்மாதிரித் தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

தினத்தாள் நூலகத்தின் அமைப்பு முறையை எடுத்துக்கூற உலகப்புகழ்பெற்ற "டைம்ஸ்" பத்திரிகையின் நூலகத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இந்த நூலகத்தில் ஓர் நிர்வாகி 53 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினர். இங்கு லட்சக்கணக்கான செய்தித் துணுக்களை வகைப்படுத்தி வைத்திருக்கிறார் கள். செய்திகளை வகைப்படுத்தும் திறனுள்ளவர்கள் அன்றாடம் தினத்தாள்களிலுள்ள செய்திகளை அடையாள மிட்டுத்தந்து விடுவார்கள். நூலக ஊழியர்கள் அவற் றைக் கத்தரித்து எடுத்துத் தனித்தாளில் ஒட்டி, இன்ன பத்திரிகையில் இன்ன நாளில் வெளியானது என்று குறிப்பிட்டு வகைப்படுத்தி வைத்துவிடுவார்கள். செய்தி அட்டவணையிலும்அவைபற்றிக் குறிப்பு எழுதிச் சேர்த்துக் கொள்வார்கள். உதாரணமாகச் சீனச் செய்திகள் தொகுப்பை எடுத்துக்கொள்வோம். சீன-விவசாயம். சீன-ஆலைகள், சீன-வெளிஉறவு என பல தலைப்புக்களில் சீனச் செய்திகளை தொகுத்து வைப்பார்கள். வெளி உறவுத் தொகுப்பிலும், ராஜதந்திர உறவு. வர்த்தக உறவு எனப் பல உப பிரிவுகளில் செய்திகளை வகைப் படுத்தி வைப்பார்கள். இதேபோல, உள்நாட்டுச் செய்தி களையும் சட்டம்-நீதி, விவசாயம், வாணிபம், குடியிருப்பு, கலை, சமூகநலன் என வகைப்படுத்தி வைப்பார்கள்.

வாழ்க்கைக் குறிப்புக்கள் தொகுப்புத்தான் செய்தித் தொகுப்புக்களில் முக்கியமானது. பொது வாழ்க்கை

யிலிடுபட்டவர்களில் சிலர் திடீரெனப் புகழ்பெற்று விடுவார்கள்; உயர்பதவி பெறுவதன் மூலம் மக்கள் கவனத்தை ஈர்ப்போர் சிலர். வாழ்க்கைக் குறிப்புத் தொகுப்பிலுள்ள தகவல்களைப் பார்வையிடுவதன் மூலம் இவர்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். பிரமுகர்கள் மறைவு பற்றிய செய்திகளைத் தரும்போது, சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அரசியல் பிரமுகர்களின் அறிக்கைகளை வெளியிடும்போதும், முக்கியமான பிரச்னைகளைப் பற்றி கருத்து வழங்கும்போதும் இதே பொருள்பற்றி முன்பு அவர்கள் கூறியுள்ள கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் அவசியம் நேரலாம். ஆகவே ஒவ்வொருவரைப்பற்றியும், நாளது வரையிலுள்ள செய்திகளை குறித்து வைத்துக்கொள்வது மிகமிக அவசியமாகும். டைம்ஸ் அலுவலகத்தில் லட்சக்கணக்கான பேர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் உண்டு. உலகத் தலைவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் பலநூறு பக்கங்கள் அடங்கிய குறிப்புக்கள் உண்டு. உதாரணமாக, ஸர் வின்ஸ்டன் சர்ச்சிலைப்பற்றி ஒன்பது தொகுப்புக்கள் இருக்கின்றன. இந்தச் செய்திக் களஞ்சியத்தில் இசை நாடகம், கலை எனப் பல பொருள்களைப்பற்றி, ஆண்டு வாரியாகச் செய்திகளைத் தொகுத்து வைத்திருக்கிறார்கள். ஒரு நிருபர் சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு நடந்த நாடகம் அல்லது இசை நிகழ்ச்சியைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினால், அந்த ஆண்டுத் தொகுப்பைப் புரட்டி எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

டைம்ஸ் அலுவலகத்தில் பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் புகைப்படம் (மைக்ரோ பிலிம்) எடுத்து வைக்கிறார்கள். இதனால் பல ஆண்டுத்தினத்தாள்களை ஓர் அலமாரியில் அடக்கி வைத்துவிடமுடிகிறது. குறிப்

பிட்ட ஓர் தேதிப் பத்திரிகையைப் பார்க்க விரும்பினல் அந்தப்படச்சுருளை, திரையிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும். 1785ஆம் ஆண்டிலிருந்து நாளது வரையிலுள்ள டைம்ஸ் பிரதிகளை புகைப்படச் சுருள்களில் எடுத்து வைத்திருக்கிருர்கள்.

நூலகத்தில் பிரதேசப் படங்கள் பிரிவு ஒன்று உண்டு. உலகின் பல்வேறு பகுதிப்படங்களை இங்கு காணலாம். வேறு ஓர் பிரிவில் ஆண்டுத் தகவல் ஏடுகள், யார்-எவர் ஆண்டு வெளியீடுகள், பஞ்சாங்கம், ஆண்டில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளைத் தரும் 'அன்னுவல் ரிஜிஸ்டர் கள்' என பல்வேறு தகவல் நூல்களைச் சேகரித்து வைத் திருக்கிருர்கள்.

நூலகச் சிப்பந்திகள் செய்தித் தொகுப்பாளர் களாகச் செயலாற்றுவதில் பயனில்லை. தங்களுடைய உதவியை நாடும் நிருபர் அல்லது ஆசிரியருக்குத் தகவல் களை வழங்குவதுடன் அவற்றையொட்டிய வேறு பல செய்திகளை எடுத்துக்கூறும் திறமையும் பெற்றிருக்க வேண்டும். தினத்தாள் நூலகங்களில் — செய்திக்களஞ் சியங்களில்—அலுவல்திட்டம் வகுத்துக்கொண்டு செய லாற்ற முடியாது. ஓர் பிரமுகரைச் சந்திக்க விமான நிலை யத்திற்கு ஓடும் நிருபர், அந்தப் பிரமுகரைப் பற்றி குறிப் புக்கள் கேட்பார். நூலகச் சிப்பந்தி தரும் குறிப்புத் தாள்களை செல்லும்போதே படித்துக்கொள்ளலாம் என்று கருதி, கைப்பையிலடைத்துக்கொண்டு கிளம்பி விடுவார். அவரிடம் கொடுத்த தகவல்களைப்பற்றி இரவல் பதிவேட்டில் பதிந்து, கையெழுத்துப் பெற அவகாசம் இராது. அவர் குறிப்புத்தாள்களைத் திருப்பித்தராவிட் டால் விழிப்பாக இருந்து திரும்பக் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும்.

சாதாரண நூலகச் சிப்பந்திகளைப் போல சம்பிர தாயங்களுக்கு முதலிடமளிக்காமல், சிறந்த முறையில் ஆதாரக் குறிப்புக்களுடன் செய்திகளை வெளியிடத் துணை செய்வதே முதற்பணி எனக்கருதி செய்திக்களஞ் சியச் சிப்பந்திகள் செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு வரும் நேரத்துடன் போட்டியிட்டுக்கொண்டு பணியாற்று வதால், கேட்கும் தகவல்கள் கிடைத்ததும், ஒருவர் நன்றி கூறுமலே சென்றுவிட்டால் அதைப் பொருட்படுத்தக் கூடாது. இன்னாரிடம் இன்ன இன்ன குறிப்புக்களைத் தந்திருக்கிறோம் என்பதைச் சிப்பந்திகள் நினைவில் வைத் துக்கொண்டு அவற்றை மீட்டுக்கொள்வதில் கருத்தாக இருக்கவேண்டும்.

லண்டனிலுள்ள பி. பி. சி. வானொலி நிலையத் திலும் செய்திக் களஞ்சியப் பிரிவு ஒன்று உண்டு. இங்கு செய்தித்தாள்களிலிருந்து மட்டுமின்றி, சிறப்புத் தாள்களிலிருந்தும்வேறுபல பிரசுரங்களிலிருந்தும் செய்தி களைச் சேகரித்து வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

பிரிட்டனில் ஒவ்வொரு தினத்தாள் அலுவலகத்தி லும் செய்திக் களஞ்சியம் உண்டு. ஒரு சில வார— திங்கள் வெளியீடுகளும் கூட, தம்தம் தேவைக்கேற்ற படி, செய்திக் களஞ்சியப் பிரிவை அமைத்துக் கொண் டிருக்கின்றன.

இந்தியாவின் முன்னேற்றம்

ஜே. ஆர். விக்கின்ஸ்

ஆசியாவின் அமைதியான உபகண்டமாகிய இந்தியாவில், சமூக, பொருளாதார, அரசியல், மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை நாற்பது கோடி மக்களின் வாழ்க்கையை மாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆசியாவின் மற்ற இடங்களில் புரட்சியால் விளைந்துள்ள மாற்றங்களைவிட அவை முக்கியமானவை; விரைவாக ஏற்பட்டவை.

இரத்தம் சிந்தாத புரட்சி அது. அது ஒரு மாற்றம். மேற்கத்திய நாட்டார் அது எவ்வளவு பெரிய மாறுதல் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது.

நாடு முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. மண் குடிசைகள் மறைந்து, பஞ்சாபின் தலைநகரமாகிய சாந்தி காரிலுள்ளவை போன்ற இல்லங்கள் தோன்றுகின்றன. ஒட்டக வண்டிகளுக்குப் பதிலாக அழகான கார்களைக் காண்கின்றோம். கல் ஆயுதங்கள் ஒழிந்து விட்டன; எஃகுக் கருவிகள் வந்து விட்டன, மாட்டுச் சான விசைக்குப் பதிலாக அணுசக்தி மின்சாரம் பயன் படப் போகிறது. நிலப் பிரபுக்கள் முறை நீங்கி சோஷலிஸம் ஏற்படுகிறது. காலனி ஆதிக்கம் அகன்று சுதந்திரம் நிலவுகிறது. எழுத்தறியாமை போய், கலை யறிவு செழிக்கிறது. மத சமுதாயம், மதப் பற்றில்லாத உலகியல் சமுதாய மாகிறது.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி

(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்

THE

India Leather Corporation (Private) Ltd.

Premier Exporters Of
E. I. Tanned Hides, Kips & Skins

- Kips (Cow Hides)
- Cowcalf Skins
- Buffalo Hides
- Buffcalf Skins
- Goat Skins
- Sheep Skins

9, DAVIDSON STREET
G. P. O. BOX - 1516
MADRAS - 1.

தி இந்தியா லெதர் கார்ப்பொரேஷன்
(பிரைவேட்) லிமிடெட்
9, டேவிட்ஸன் தெரு,
தபால் பெட்டி—1516.
சென்னை-1

Phone: 4491
2059

Grams: "TANDRIGHT"